அல் ஷா
இஸ்லாமிய ஜோதிட ஆலயம்
குழந்தைகள் மற்றும்
பெரியோர்களுக்கு அனைத்து
விதமான தோஷங்களுக்கு இஸ்லாமிய
முறைப்படி தாயித்து கட்டப்படும்.
கே.சி.சி. நகர் 2வது தெரு, பாகலூர் ரோடு, ஓசூர்.
தொடர்பு கொள்ள: 8660173457

# தமிழ் சுடர்

காலை நாளிதழ்

TAMIL SUDAR-TAMIL MORNING NEWSPAPER




சென்னை | சுடர்: 18 ஒளி: 299 | திங்கள்கிழமை, ஆகஸ்ட் 19, 2024 | சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி | 8 பக்கங்கள் | ரூ.7

CHENNAI | VOL:18 ISSUE:299 | MONDAY, AUGUST 19, 2024 | for e-paper visit: www.tamilsudar.net | RNI Regn. No. TNTAM/2006/16482 | 8 PAGES Rs.7/-





முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்த மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங்கும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள். (அடுத்த படம்) நினைவிட வளாகத்தில் உள்ள கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வரலாற்று புகைப்படங்களை மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நாணயம் வெளியீடு

# இந்தியாவின் தேசிய ஆளுமை கருணாநிதி!

### மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் புகழாரம்

சென்னை,ஆக.19–

கருணாநிதி நூற்றாண்டு நினைவுநாணயத்தை மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார். அதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெற்றுக் கொண்டார். இந்தியாவின் தேசிய ஆளுமை கருணாநிதி என நாணயத்தை வெளியிட்டு மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் புகழாரம் சூட்டிர்ன.

**5 முறை முதல்வர்**

தமிழகத்தில் 5 முறை முதல்வராகவும், 13 முறை சட்டப்பேரவை மற்றும் மேலவை உறுப்பினராகவும் இருந்த மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கடந்த 2023ம் ஆண்டு ஜூன் 3ம் தேதி முதல் ஓர் ஆண்டுக்கு கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

இதை முன்னிட்டு தமிழக அரசின் தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 'நினைவுநாணயம்' வெளியிட மத்திய அரசுக்கு கடந்தாண்டு ஜூலை 23ம் தேதி கடிதம் எழுதினார்.

இந்த நாணயத்தை, கடந்த ஜூன் 3ம் தேதி கலைஞர் கருணாநிதியின் நூறாவது பிறந்தநாளில் வெளியிட திட்டமிடப்பட்டிருந்தது.

பல்வேறு காரணங்களால் இந்த நாணயம் குறிப்பிட்ட தேதியில் வெளியிட முடியாமல் இருந்தது. இந்த நிலையில் தமிழக அரசு சார்பில் கலைஞரின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று நடைபெற்றது.

விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்தார். அமைச்சர் துரைமுருகன் முன்னிலை வகிக்கிறார்.

விழாவில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுத்துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், அரசியல் கட்சி தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், திரையுலக பிரமுகர்கள், முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**நாணயம் வெளியீடு**

சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று (18ந் தேதி) மாலை தொடங்கிய விழாவில் கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயத்தை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார். அதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் பெற்றுக் கொண்டார். ரூ.100 முகமதிப்பு கொண்ட அந்த நாணயத்தில் 'தமிழ் வெல்லும்' என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது.

**பிரதமருக்கு நன்றி தெரிவித்த முதல்வர்**

பின்னர் விழாவில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவில் பெருந்தன்மையோடு கலந்து கொண்டுள்ள மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், அதிகாரிகள், விழாவில் பங்கேற்றுள்ள அனைவரையும் வரவேற்பதாகக் கூறினார்.

நாணய வெளியீட்டுக்காக ஒத்துழைத்தமைக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.




**பன்முகத்தன்மை கொண்டவர்**

இந்த விழாவுக்கு திமுக பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் முன்னிலை வகித்து வரவேற்புரையாற்றினார். அப்போது பேசிய அவர், பன்முகத்தன்மை கொண்டவர் கலைஞர் என அமைச்சர் துரைமுருகன் புகழாரம் சூட்டினார். அரை நூற்றாண்டாக திமுக தலைவராக இருந்தவர் கலைஞர். ஒடுக்கப்பட்டோர் மற்றும் மாநில வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர் கலைஞர். இது போன்ற சாதனையை வேறு யாரும் செய்ததில்லை.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

**நாணயமிக்க தலைவருக்கு நாணயம் வெளியீடு:**

அப்போது அவர், "எனது உணர்வுகளை எப்படி விவரிப்பது என்பது குறித்து சொல்ல முடியாத மகிழ்ச்சியில் நான் இங்கே நின்று கொண்டிருக்கிறேன். நாணயம் மிக்க தலைவருக்கு நாணயம் வெளியிட்டது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது, இதனை இந்தியாவே கொண்டாடி வருகிறது. "அனைத்துக் கட்சியினருடனும் நட்பு பாராட்டும் ராஜ்நாத் சிங் கருணாநிதி நினைவு நாணயத்தை வெளியிட பொருத்தமானவர்.

சுதந்திர தினத்தன்று மாநில முதல்வர்கள் தேசியக் கொடியை ஏற்றும் உரிமையைப் பெற்றுத் தந்தவர் கருணாநிதி.

கொடுத்த வாக்கை காப்பாற்றுவதற்கு பெயரும் நாணயம் தான், சொன்ன வாக்கை செயல்படுத்தி காட்டியது மறைந்த முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதியின் நாணயம் தான்.

மறைந்த முன்னாள் முதல் அமைச்சர் கருணாநிதி உருவாக்கிய கட்டமைப்புகளை பட்டியலிட்டு கூற ஒருநாள் போதாது" மாநில உரிமைகளுக்காகப் போராடிய கருணாநிதி நெருக்கடி நேரங்களில் நாட்டுக்கு கைகொடுத்தார். தமிழகத்தில் நடப்பது ஒரு கட்சி சார்ந்த அரசல்ல; இங்கே ஓர் இனத்தின் அரசு நடக்கிறது."

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

**இந்தியாவின் தேசிய ஆளுமை கருணாநிதி ராஜ்நாத் சிங் புகழாரம்**

தொடர்ந்து பேசிய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது;

அனைவரும் எழுந்து நின்று மகத்தான தலைவர் கருணாநிதிக்கு மரியாதை செலுத்த அழைக்கிறேன் என்று அழைப்பு விடுத்தார். அதைத் தொடர்ந்து அரங்கில் இருந்தவர்கள் எழுந்து நின்று மரியாதை செய்தனர்.

பின்னர் பேசிய மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியதாவது: கருணாநிதியின் அரசியல் போராட்டங்கள் தீவிரமானவை, துணிச்சல் மிக்கவை. இந்தியாவின் தேசிய ஆளுமை கருணாநிதி. நாட்டின் தலைசிறந்த நிர்வாகியான கருணாநிதி மத்தியில் வெற்றிகரமான கூட்டணி அரசமைய காரணமானவர். கருணாநிதியின் பொது நலத்தொண்டால் நாட்டிற்கே நன்மை ஏற்பட்டுள்ளது. 1960 முதல் தற்போது வரை ஆதிக்கம் செலுத்தும் கட்சியாக தி.மு.க.வை வளர்த்தவர் கருணாநிதி. கூட்டாட்சித் தத்துவத்திற்கு பாடுபட்ட கருணாநிதி நாட்டு நலனுக்காகவும் குரல் கொடுத்தவர். தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் அரசியல் வரைபடத்தை உருவாக்கியதில் கருணாநிதிக்கு முக்கிய பங்கு உண்டு. பல்வேறு தேசிய கட்சிகளுடன் நல்லுறவை பேணி வந்தவர் கருணாநிதி.

விளிம்பு நிலை மக்களுக்கு தரமான கல்வியை வழங்க திட்டங்களை கொண்டு வந்தவர் கருணாநிதி. மகளிர் அதிகாரம் பெற கருணாநிதி கொண்டு வந்த மகளிர் சுய உதவிக்குழுக்கள் உதவுகின்றன. பாலின சமத்துவம் பேணும் வகையில் மகளிர் சுயஉதவிக்குழு திட்டத்தை கருணாநிதி கொண்டு வந்தார்.

பல்வேறு தேசிய கட்சிகளுடன் நல்லுறவைப் பேணியவர். தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் அரசியல் வரைபடத்தை உருவாக்குவதில் கருணாநிதிக்கு முக்கிய பங்கு இருக்கிறது.

கூட்டாட்சி தத்துவத்துக்கு பாடுபட்ட கருணாநிதி நாட்டின் நலனுக்காகவும் குரல் கொடுத்தவர்."

இவ்வாறு மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் புகழாரம் சூட்டினார்.

**மெரினாவில் மரியாதை:**

நாணய வெளியீட்டு விழாவில் பங்கேற்பதற்கு முன்னதாக, சென்னை மெரினாவில் உள்ள கருணாநிதி நினைவிடத்துக்குச் சென்ற அமைச்சர் ராஜ்நாத் சிங் அங்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அங்கு கருணாநிதி அருங்காட்சியகத்தையும் ராஜ்நாத் சிங் பார்வையிட்டார்.

## கருணாநிதி நினைவு நாணயம் வெளியீட்டு விழா: ராகுல் காந்தி வாழ்த்து; முதல்வர் ஸ்டாலின் நன்றி!

சென்னை,ஆக.19–

கருணாநிதி நினைவு நாணயம் வெளியீட்டு விழாவுக்கு வாழ்த்து கூறிய காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்திக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

கருணாநிதி நினைவு நாணயம் வெளியீட்டு விழா குறித்து ராகுல் தனது எக்ஸ் தளத்தில், "தமிழக மக்களுக்கு எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கருணாநிதியின் அசாதாரண வாழ்க்கையை போற்றும் வகையில் நினைவு நாணயம் வெளியிடப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.



கலைஞர் கருணாநிதியின் சமூக முற்போக்கான தொலைநோக்குப் பார்வையும், மக்களுக்கு அதிகாரம் அளிப்பதில் அவர் கொண்ட அசையாத அர்ப்பணிப்பும் கோடிக்கணக்கான மக்கள் கண்ணியமான வாழ்க்கையை வாழ வழி வகுத்தது. அவரது தீர்க்கமான தலைமையின் கீழ் தான், தமிழகம் ஒரு துணிச்சல் மிகு லட்சிய மாற்றத்துக்கான பாதையில் இறங்கியது.

அவரது கருத்தியல் தெளிவும் மாற்றத்துக்கான அர்ப்பணிப்பும் தமிழ்நாடு பல்வேறு துறைகளில் தன்னை ஒரு முன்னோடியாக உறுதியாக நிலைநிறுத்த உதவியது மற்றும் பல மாநிலங்களை பெரிய கனவு காண தூண்டியது. இந்தச் சந்தர்ப்பத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினையும் பாராட்ட விரும்புகிறேன். இந்தியாவை பாதுகாப்பதில் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை ஸ்டாலின் கொண்டுள்ளார்" எனப் பதிவிட்டுள்ளார்.

ராகுல் காந்திக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், "அன்பு சகோதரருக்கு நன்றி. கலைஞரின் கனவை நனவாக்க நாம் தொடர்ந்து ஒன்றிணைந்து பணியாற்றுவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

## ஜார்க்கண்ட் அரசியல்: பாஜகவில் இணைகிறாரா சம்பாய் சோரன்? 6 எம்எல்ஏக்களுடன் டெல்லியில் முகாம்

ராஞ்சி,ஆக.19–

ஜார்க்கண்ட் முக்தி மோர்சா கட்சி பிரமுகரும், முன்னாள் முதல்வருமான சம்பாய் சோரன் விரைவில் பாஜகவில் இணைய இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரும், அம்மாநில முதல்வருமான ஹேமந்த் சோரன் பண மோசடி வழக்கில் அமலாக்கத் துறையால் கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து அவர் தனது பதவியை ராஜினாமா செய்ததையடுத்து, ஜார்க்கண்ட் முக்தி மோர்சா கட்சியைச் சேர்ந்த சம்பாய் சோரன் புதிய முதல்வராக தேர்வு செய்யப்பட்டார்.

இதனையடுத்து ஹேமந்த் சோரனுக்கு ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம் ஜாமீன் வழங்கியதையடுத்து கடந்த ஜூலையில் சம்பாய் சோரன் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

ஹேமந்த் சோரன் மீண்டும் முதல்வராகும் வகையில் தனது பதவியை ராஜினாமா செய்ததால் சம்பாய் சோரன் கடந்த சில நாட்களாக அதிருப்தியில் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், ஜார்க்கண்ட் முக்தி மோர்சா கட்சியைச் சேர்ந்த ஆறு எம்எல்ஏக்களுடன் டெல்லியில் முகாமிட்டுள்ளதாகவும், விரைவில் அவர் பாஜகவில் இணைய இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "என்னுடைய தனிப்பட்ட வேலைகளுக்காக இங்கு வந்துள்ளேன். வதந்திகள் பரப்பப்படுவது குறித்து எதுவும் தெரியவில்லை". இவ்வாறு சம்பாய் சோரன் தெரிவித்தார்.

## இன்றைய ராசிபலன்

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை 06.15-07.15 | 09.15 - 09.15 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை 04.45-05.45 | 07.30 - 08.30 | 09.00 | 03.00 | 12.00 |
| சூலம் - கிழக்கு<br>பரிகாரம் - தயிர் | சிம்ம லக்கனம்<br>இருப்பு நா.4 வி.55 | சந்திராஷ்டமம்<br>மிருகசீருஷம் | | |
| கரணம் 01.30 - 03.00 | சூரிய உதயம் 6.04 | | | |

பௌர்ணமி 47.42 (கா. 01.09) திருவோணம் 07.39 (கா. 09.08) தியாஜ் 16.55 அமிர்த 07.39 மேல் சித்த. பௌர்ணமி. ஆவணி அவிட்டம். கீழ்திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளுக்கு புஷ்ப அலங்காரம். சங்கரன்கோவில் ஸ்ரீகோமதியம்மன் புஷ்பப்பாவாடை தரிசனம்.

**மேஷம்:** ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் சிறப்பாக இருக்கிறது. பணியிடத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இன்று, பணவரவு திருப்திகரமாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**ரிஷபம்:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் சுமாரான நாளாக இருக்கிறது. வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் வேலை சம்மந்தமான பயணம் இருக்கும். வீட்டில் உள்ள பெரியவர்களிடம் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று, பணவரவு மிதமான அளவில் இருக்கும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். ஆரோக்கியத்தில் சளி சம்பந்தமான பிரச்சினை ஏற்படலாம்.

**மிதுனம்:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் சிறப்பாக நாளாக இருக்காது. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பணியிடத்தில் அதிக பணிகள் காணப்படும். பணிகளை மேற்கொள்ளும்போது அதிக கவனம் தேவை. துணையுடன் பேசும்போது ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து பேச வேண்டும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது., மேலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும். ஆரோக்கியத்தில் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

**கடகம்:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் சாதகமான நாளாக இருக்கிறது. புதிய நண்பர்களின் பழக்கம் கிடைக்கும். பணியிடத்தில் சக பணியாளர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். இன்று, நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் சளி பிரச்சனை ஏற்படலாம்.

**சிம்மம்:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் வெற்றி கிடைக்கும் நாளாக இருக்கிறது. பணியிடச் சூழல் திருப்திகரமாக இருக்கும். பயணம் மூலம் வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். இன்று, பணவரவு அதிகமாக இருக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**கன்னி:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் உகந்த நாளாக இருக்கிறது. இன்று, நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம். பணியிடத்தில் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இன்று, பங்கு வர்த்தகம் மூலம் லாபம் கிடைக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**துலாம்:** ராசிக்காரர்களுக்கு இன்றைய நாள் சிறப்பான நாளாக இருக்கிறது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். பணியிடத்தில் பணி சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள். கணவன் மனைவி இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இன்று, கடின உழைப்பின் மூலம் பணவரவு வரும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**விருச்சிகம்:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் சாதகமான நாளாக இருக்கிறது. இன்று, முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பணியிடத்தில் பணிகளை எளிதாகவும் சிறப்பாகவும் செய்து முடிப்பீர்கள். இன்று, பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் உள்ளவர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

**தனுசு:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் உகந்த நாளாக இருக்காது. எதிலும் பொறுமையாக இருக்க வேண்டும். பணியிடத்தில் பணிச்சுமை அதிகமாக இருக்கும். மேலும், அனுசரித்து நடந்துகொள்வது அவசியம். உறவினர்களிடம் பேசும்போது கவனம் தேவை. இன்று, பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகளும் ஏற்படும். ஆரோக்கியத்தில் கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்படலாம்.

**மகரம்:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் மிதமான பலன்கள் கிடைக்கும் நாளாக இருக்கிறது. தொழில் செய்பவர்களுக்கு அதிக லாபம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அதேபோல், வேலை செய்பவர்களுக்கு மேலதிகாரியின் அங்கீகாரம் கிடைக்கும். துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இன்று, நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் சளி பிரச்சினை ஏற்படலாம்.

**கும்பம்:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் உகந்த நாளாக இருக்காது. பணியிடத்தில் அதிக பணிகள் காணப்படும். குடும்பத்தில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று, செலவுகள் அதிகமாக இருக்கும். ஆரோக்கியத்தில் கால்கள் மற்றும் தொடைகளில் வலி ஏற்படலாம்.

**மீனம்:** ராசிக்காரர்களுக்குஇன்றைய நாள் சாதகமான நாளாக இருக்கிறது. பணியிட சூழல் உங்களுக்கு சாதகமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இன்று, பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். இதனால் சேமிப்பு உயரும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

செய்தி மற்றும் விளம்பரத் தொடர்புக்கு

தமிழ் சுடர்
காலை நாளிதழ்

S.சங்கர் :
94868 68787, 86680 68864
K.சுப்பிரமணியன் :
94884 00071, 9500422229
email: tamilsudarr786@gmail.com
ks67mdu@gmail.com
maduraisudrr@gmail.com

அலுவலக தொலைபேசி: 8778683741

சென்னை அலுவலகம்
33/1, வாலாஜா ரோடு, சேப்பாக்கம், சென்னை.

HO.மதுரை அலுவலகம்
Ess Ess Publications,
1-சி, அகிம்ஷாபுரம்,
6வது தெரு, விரிவாக்கம்
செல்லூர், மதுரை - 625002

# ஓசூர் - கிருஷ்ணகிரி தமிழ்நாடு ஓட்டல்களில் அமைச்சர்கள் கா.ராமச்சந்திரன்-அர.சக்கரபாணி ஆய்வு



கிருஷ்ணகிரி,ஆக.19–

கிருஷ்ணகிரி தமிழ்நாடு ஓட்டல் மற்றும் ஓசூர் தமிழ்நாடு ஓட்டல் ஆகிய ஓட்டல்களின் விடுதிகள் மற்றும் உணவகங்களின் செயல்பாடுகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் மாவட்ட கலெக்டர் கே.எம். சரயு , ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் முன்னிலையில் நேற்று (17ந் தேதி) ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வுக்கு பின் சுற்றுலாத் துறை அமைச்சர்கா.ராமச் சந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து துறைகளையும் சிறந்து விளங்கும் வகையில் ஒவ்வொரு துறையினையும் தனித்தனியாக ஆய்வு செய்ய உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில் சுற்றுலாத் துறை சார்பாக பல்வேறு மேம்பாட்டு பணிகள் மேற் கொள்ள கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு ஓட்டல்கள் தற்பொழுது ஆய்வு செய்யப்பட்டது. கிருஷ்ணகிரி தமிழ்நாடு ஓட்டல் 1982 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. மேலும், 1996 ஆம் ஆண்டு கூடுதலாக புது கட்டிடம் கட்டப்பட்டது. 2004 முதல் 2023 வரை மேலும் கட்டிடங்கள் கட்டப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த ஓட்டல் 2.30 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப் பட்டுள்ளது. இந்த ஓட்டலில் தங்கும் அறை, கழிப்பறை வசதி, உணவகம், மது பானக் கூடம், இலவச வைபை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் பழைய படுக்கைகளுக்கு பதிலாக புதிய தலையணை மற்றும் படுக்கைகள் மாற்றிய மைக்கப்பட்டுள்ளது.

அனைத்து அறைகளுக்கும் குளிரூட்டும் கருவி (ஏசி), தொலைக்காட்சி உள்ளிட்ட வசதிகள் தற்போது அமைக் கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் இயங்கும் தமிழ்நாடு ஓட்டலுக்கு கூடுதல் வசதிக்காக ரூ.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தேசிய நெடுஞ் சாலையில் அமைந்துள்ள கிருஷ்ணகிரி தமிழ்நாடு ஓட்டலுக்கு ரூ.60 கோடி மதிப்பில் மேம்படுத்த திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி தமிழ்நாடு ஓட்டலில் 8 டீலக்ஸ் அறைகள் மற்றும் பார்கள் மறுசீரமைப்பு பணிகளுக்காக ரூ.67 இலட்சம் மதிப்பில் சீரமைக்கப்பட உள்ளது. சுற்றலா வளர்ச்சி கழகத்தை 1974ல் கலைஞரால் ஆரம்பித்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக தற்போது 28 ஓட்டல்கள் நேரடியாக நடத்தப்பட்டு வருகிறது. ஓசூர் தமிழ்நாடு ஓட்டல் 15.04.1992ல் ஆரம்பிக் கப்பட்டது. குடில்கள் அனைத்தும் 2000ம் ஆண்டு கட்டப்பட்டது. மொத்தம் 3 ஏக்கர் 21 சென்ட்டில் அமைக் கப்பட்டுள்ளது.

இவற்றில் தங்கும் அறைகள், மதுபானக்கூடம், உணவகங்கள், கூட்டரங் கம், இலவச வைபை போன்ற வசதிகள் அமைக் கப்பட்டுள்ளது. 14 அறைகள் ஏசி அறைகளும் 10 அறைகள் ஏசி இல்லாத அறைகளும் உள்ளது. தற்போது அனைத்து அறைகளையும் ஏசி அறைகளாக மாற்றவும், அனைத்து அறைகளுக்கும் தொலைக்காட்சி வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. தற்போது 16 அறைகள் பழுதுபார்க்க ரூ.1 கோடியே 18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஓட்டலில் 14 குடில்கள் ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பில் மறுசீரமைப்பு பணிகள் துவக்கப்பட உள்ளது.

ஓசூர் தமிழ்நாடு ஓட்டலில் 36 நிரந்தரப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஓட்டலில் 2021 22 ம் ஆண்டில் ரூ.11 இலட்சத்து 81 ஆயிரமும், 202223 ம் ஆண்டில் ரூ.33 இலட்சத்து 35 ஆயிரமும், 202324 ம் ஆண்டில் ரூ.40 இலட்சத்து 86 ஆயிரம் இலாபம் வரப்பெற்றுள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் ரூ.14 இலட்சத்து 52 ஆயிரம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. தற்போது வரை 45 சதவிகித சுற்றுலா பயணிகள் தங்கி வருகின்றனர். மேலும் 70 முதல் 80 சதவிகித சுற்றலா பயணிகள் தங்குவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அனைத்து தமிழ்நாடு ஓட்டல்களிலும் புல்வெளிகள் சீரமைக்கப்பட்டு பசுமைசூழல் உருவாக்கப்பட் டுள்ளது. ரூ.11 கோடி நஷ்டத்தில் இருந்த தமிழ்நாடு ஓட்டல் தற்போது தமிழ்நாடு முதலமைச்சரின் நேரடி பார்வையில் அனைத்து துறைகளும் செயல்பட்டு வருவதால் தற்போது 2022 -2023 நிதியாண்டில் ரூ.29 கோடி லாபத்திலும், 2023-2024 நிதியாண்டில் ரூ. 32.5 கோடி லாபத்திலும் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்த நிதியாண்டில் சுமார் ரூ. 50 கோடி முதல் ரூ. 55 கோடி வரை இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேப்போல கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள அவதானப் பட்டி ஏரி ரூ.3 கோடியே 70 இலட்சம் மதிப்பில் இந்த நிதியாண்டில் (2024-25) புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரி வித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் எச்.எஸ்.ஸ்ரீகாந்த், ஓசூர் சார் ஆட்சியர் பிரியங்கா, ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஆனந்தைய்யா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வானில் அதிசயம்; இன்று இரவு சுடரொளி பாய்ச்சும் சூப்பர் புளூ மூன்

நாசா,ஆக.19–

வானில் இன்று (19ந் தேதி) இரவு வருகிறது வழக்கத்தை விட அதிகமாக 130 சதவீதம் முத்துச் சுடரொளி பாய்ச்சும் சூப்பர் புளூ மூன்.

இதுபற்றி அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அறிவித்திருப்பதாவது: இந்த ஆண்டு தொடர்ச்சியாக 4 சூப்பர் மூன் நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நான்கில் முதலாவது ஆகஸ்ட் 19, திங்கட்கிழமை இந்திய நேரப்படி நள்ளிரவு 12 மணிக்கு நிகழ உள்ளது. இது ஒரு சூப்பர் மூன் புளூ மூனாக இருக்கும்.

சந்திரன் பூமியை நெருங்கும் தூரம் 90 சதவீதத்திற்குள் இருக்கும் போது ஒரு சூப்பர் மூன் ஏற்படுகிறது. முழு சூப்பர் மூன் ஆண்டின் பிரகாசமான மற்றும் மிகப்பெரிய முழு நிலவுகளாக அறியப்படுகின்றன. இது வழக்கமான நிலவை விட 30 சதவீதம் பிரகாசமாகவும் 14 சதவீதம் பெரியதாகவும் தெரிகிறது. மறுபுறம் இரண்டு வகையான புளூ மூன் உள்ளன. புளூ என்பதால் நிலவு புளூ நிறத்தில் இருக்கும் என்று அர்த்தம் இல்லை.

நான்கு முழு நிலவுகளைக் கொண்ட ஒரு பருவத்தில் மூன்றாவது முழு நிலவு புளூ மூன் என்று அழைக்கப்படுகிறது. இன்று காணக் கூடிய புளூ மூன் வகை இதுவாகும். இந்த நிகழ்வு 3 நாட்கள் நடைபெற உள்ளது. இவ்வாறு நாசா தெரிவித்துள்ளது.



78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வேலூர் நறுவீ மருத்துவமனை வளாகத்தில் மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் செயல் இயக்குநர் டாக்டர் பால் ஹென்றி, மருத்துவ சேவைகள் தலைவர் டாக்டர் அரவிந்தன் நாயர், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ஜேக்கப் ஜோஸ், தலைமை நிதி அலுவலர் வெங்கட்ரங்கம், பொது மேலாளர் நிதின் சம்பத், மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர்.

<u>கொல்கத்தா மருத்துவர் விவகாரம்</u>

## முன்னாள் முதல்வர் மூன்றாவது முறையாக சிபிஐ அலுவலகத்தில் ஆஜர்

புதுடெல்லி,ஆக.19–

கொல்கத்தா பயிற்சி மருத்துவர் கொல்லப்பட்ட வழக்கை சிபிஐ விசாரித்து வரும் நிலையில், ஆர்.ஜி கர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முன்னாள் முதல்வர் சந்தீப் கோஷ் நேற்று மூன்றாவது கட்ட விசாரணைக்காக கொல்கத்தாவில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் ஆஜரானார்.

இதற்கிடையில், இந்த வழக்கு தொடர்பாக தவறான தகவல்களை பரப்பியதற்காக டாக்டர். குணால் சர்க்கார் மற்றும் டாக்டர். சுபர்னோ கோஸ்வாமி மற்றும் பாஜக தலைவர் லாக்கெட் சாட்டர்ஜி ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் நேற்று பிற்பகல் 3 மணிக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக அக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் சந்தீப் கோஷயிடம் சனிக்கிழமை அன்று காலை 10 மணி முதல் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வரை சுமார் 13 மணி நேரம் சிபிஐ விசாரணை மேற்கொண்ட நிலையில் நேற்று காலை மீண்டும் வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் நேற்று மூன்றாவது கட்ட விசாரணை அவரிடம் மேற்கொள்ளப்படுகிறது.

அவரிடம் சிபிஐ,பயிற்சி மருத்துவர் உயிரிழந்த தகவல் கிடைத்ததும் அவர் யாரைத் தொடர்பு கொண்டார்.

பெற்றோரை ஏன் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் காத்திருக்க வைத்தார்.

இச்சம்பவத்தின் பின்னர் மருத்துவமனையில் அவசர கட்டிடத்தில் கருத்தரங்கு மண்டபத்திற்கு அருகில் உள்ள அறைகளை சீரமைக்க உத்தரவிட்டது யார் ?

குற்றத்திற்கு ஏதேனும் சதி அல்லது முன் திட்டமிடல் உள்ளதா ?

எந்த வகையிலும் சம்பவத்தில் ஈடுபட்டாரா ? சம்பவத்தன்று இரவுபணியில் இருந்தவர்களிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் சந்தீப் கோஷயிடம் பெறும் வாக்கும் ஒத்துப்போகிறதா? போன்ற கேள்விகள் கேட்கப் பட்டு வருவதாக சிபிஐ அதிகாரிகள் கூறுகின்றனர்.

ரத்த தானம் செய்வோம்! உயிர்களை காப்போம்!!



## திருமுல்லைவாயல் ஸ்ரீ பச்சையம்மன் ஆலயத்தில் வரலட்சுமி பூஜை





மாதவரம், ஆக.19–

சென்னை அம்பத்தூர் அடுத்த திருமுல்லைவாயல் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பச்சையம்மன் ஆலயத்தில் ஆடிமாத வரலட்சுமி பூஜை மற்றும் சந்தனகாப்பு நிகழ்ச்சி ஆலய தர்மகர்த்தா அம்பிகாபதி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஆலய பூசாரி பாலாஜி முன்னிலையில் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் சந்தனகாப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாளத்துடன் ஆலய மாடவீதி உலா நடைபெற்றது.

இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## தெற்கு மாவட்ட டீஎன்டிஜேவின் போதைப் பொருள் எதிர்ப்பு பேரணி



தஞ்சாவூர். ஆக.19–

பட்டுக்கோட்டை வடசேரி ஆத்துப் பாலத்தில்78வது சுதந்திர தினத்தையொட்டி தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தஞ்சை தெற்கு மாவட்டம் பட்டுக்கோட்டை கிளை சார்பில் போதைப் பொருள்களுக்கு எதிராக மாபெரும் மக்கள் திரள் பேரணி மாவட்டச் செயலாளர் ஆவணம் எஸ்.ரியாஸ் தலைமையில் பட்டுக்கோட்டை வடசேரி ஆத்துப் பாலத்தில் துவங்கி மணிக்கூண்டில் நிறைவு பெற்றது.

மாவட்ட துணைத் தலைவர் அஷ்ரப் அலி,கிளை நிர்வாகிகள் பாரூக், ஜுபைர், அலாவுதீன்,கான், சாகுல் மற்றும் சித்திக் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர்.

மாநிலச் செயலாளர் எ.சபீர் அலி போதை பழக்கத்தால் இளைஞர்கள் அடையும் பாதிப்பு, பூரண மது ஒழிப்பின் அவசியம் போதை பொருட்கள் அதிகம் நடமாடும் தமிழகத்தை பாதுகாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழக அரசுக்கு உள்ளது. இப்பொறுப்பை உணர்ந்து தமிழக அரசு போதை பொருள் ஒழிப்பில் கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பேசினார். சிறுவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட ஐநூறுக்கும் அதிகமானோர் போதைப் பொருள்களுக்கு எதிராக விழிப்புணர்வு பதாகைகளுடன் கலந்து கொண்டு நூற்றுக்கணக்கான போதை பொருள் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தனர். கிளைத் தலைவர் முகமது பாரூக் நன்றி கூறினார்.

<u>ஸ்ரீபெரும்புதூர் நகர செயலாளர் போந்தூர் மோகன் ஏற்பாட்டில்</u>

## அதிமுக உரிமைச் சீட்டு: முன்னாள் அமைச்சர் வி.சோமசுந்தரம் வழங்கினார்



காஞ்சிபுரம்.ஆக.19–

காஞ்சிபுரம் மாவட்ட அதிமுக சார்பில் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உத்திரமேரூர் காஞ்சிபுரம் ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட தொகுதிகளை உள்ளடக்கிய அதிமுக உறுப்பினர் அடையாள உரிமை சீட்டு வழங்கும் நிகழ்வானது நடைபெற்று வருகிறது அந்த வகையில் ஸ்ரீபெரும்புதூர் நகரக் கழக செயலாளர் போந்தூர் மோகன் ஏற்பாட்டில் ஸ்ரீபெரும்புதூர் நகரக் கழக நிர்வாகிகளுக்கு தொண்டர்களுக்கு அதிமுக முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் வி.சோமசுந்தரம் அதிமுக கழக உரிமைச் சீட்டு வழங்கினார்

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் வாலாஜாபாத் பா கணேசன் காஞ்சி பன்னீர்செல்வம் ஸ்ரீபெரும்புதூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பழனி மாநில இளைஞர் இளம்பெண்கள் பாசறை இணை செயலாளர் எஸ் எஸ் ஆர் சத்யா மாவட்ட துணை செயலாளர் போந்தூர் செந்தில் ராஜன் மாவட்ட கைத்தறி பிரிவு மாவட்ட செயலாளர் வில்வபதி வெங்காடு ஊராட்சி மன்ற தலைவர் உலகநாதன் இருங்காடு கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் சிவக்குமார் பிள்ளைப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் ஊராட்சி மன்ற தலைவர் சார்லஸ் ஒன்றிய செயலாளர்கள் சிங்கிள்பாடி ராமச்சந்திரன் இறையூர் முனிசாமி மற்றும் அதிமுக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் ஏராளமானவர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியில் ஆண்டு முழுவதும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்

சென்னை, ஆக.19

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் 22.5.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகநடத்திட ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக தலைமைச் செயலாளர் தலைமையில் 4.7.2023, 26.7.2023, 3.8.2023, 16.10.2023, 1.11.2023 ஆகிய தேதிகளில் 5 ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அரசாணை (நிலை) எண்.98 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி மற்றும் விழா) த்துறை, நாள்: 22.6.2023ன்படி, அமைச்சர்கள் தலைமையில் 12 சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

முதலமைச்சர் தலைமையில் இளைஞர் நலன் மற்றும் விளையாத்து மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் அண்ணல் காந்தியடிகளின் பேரன் கோபால கிருஷ்ண காந்தி 2.6.2023 அன்று, கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு "கலைஞர் 100" இலச்சினைவெளியிடப்பட்டது.

முதலமைச்சர் கலைஞர் நூற்றாண்டு நினைவு மருத்துவமனையை 15.6.2023 அன்று கிண்டி கிங் ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில். திறந்து வைத்தார்கள். கலைஞர் நூற்றாண்டு நூலகம் 15.7.2023 அன்று மதுரையில் தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைக்கப்பட்டது. கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்2023 போட்டியில் 73,206 நபர்கள் கலந்துகொண்டு சாதனை படைத்தனர். முதலமைச்சர் சான்றிதழ்கள்வழங்கப்பட்டன.

முதலமைச்சர் கலைஞர் நூற்றாண்டு விழா இணையதளம் 7.8.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. கலைஞர்நூற்றாண்டுபேருந்து முனையம் முதலமைச்சரால் கிளாம்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்டது.

கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் முதலமைச்சர் தமிழ்நாடு 24.1.2024 அலங்கா நல்லூரில் அன்று திறந்துவைக்கப்பட்டது

பேரறிஞர் அண்ணா நினைவிடம் புதுபிக்கப்பட்டும் முத்தறிஞர் கலைஞர் நினைவிடம் நிலவறையில் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்துடன் நிர்மாணிக்கப்பட்டும் 26.2.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் காளாஞ்சிப்பட்டியில், கலைஞர் நூற்றாண்டு, ஒருங்கிணைந்த போட்டித் தேர்வு மையம் 27.2.2024 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை ஜூன் 2023 முதல் ஜூன் 2024 வரை சிறப்பாகக் கொண்டாட அரசாணை (நிலை) எண்.181, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி (ம) விழா)த் துறை, நாள்: 27.9.2023ன்படி ரூ.8,34,40,000/. கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 12 சிறப்புக் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.25 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.3கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒரு மாவட்டத்திற்கு 3 நிகழ்ச்சிகள் நடத்த ரூ.11,80,000/ வீதம்

38 மாவட்டங்களுக்கு ரூ.4,48,40,000/ ஒதுக்கீடு செய்யப்பட்டது. வருவாய் மாவட்ட அளவில் அரசுப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் பெறும் மாணாக்கர்களுக்கு ரொக்கத் தொகை ஆண்டுதோறும் வழங்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.2 இலட்சம் வீதம்

(38 மாவட்டங்களில் X ரூ.2இலட்சம்) மொத்தம் = ரூ.76 இலட்சம் கலைஞர் நூற்றாண்டுதமிழ் ஊக்குவிப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்புக் குழுக்களில் கலைஞர் கலைஞர் குழுவிற்கு கூடுதலாக ரூ.75இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை 15.12.2023 அன்று ஆணை வெளியிடப்பட்டது.

தமிழ்த்தாயின் தவப்புதல்வன் கலைஞர், குழுவிற்கு ரூ.25இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் பெயரில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் நிரந்தர வைப்பாக வைக்கப்பட்டு, அதன் வருவாயைக் கலைஞரின் பன்முகத் தன்மையைப் போற்றும் வகையில் பயன்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் செயல்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டில் வாழும் 275 தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில், ஒவ்வொருவருக்கும் ரூ.10 ஆயிரம் ஒருமுறை மட்டும் வழங்கிட ஏதுவாக ரூ.27,50,000 நிதி ஒப்படைப்பு செய்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.2)த் துறையின் அரசாணை (நிலை) எண்.179, நாள்:27.9.2023 மூலம் வழங்கப்பட்டுள்ளது.

12, சிறப்புக்குழுக்கள் மேற்கொண்ட பணிகள். 1.சட்டமன்றநாயகர் கலைஞர், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா "சட்டமன்ற நாயகர் கலைஞர்" குழுவின் மூலம் 37 மாவட்டங்களில் 120 பள்ளி மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்கம் நடைபெற்றது.

2. இதழாளர் கலைஞர். "இதழாளர் கலைஞர்" புகைப்படக் கண்காட்சி 18.10.2023 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்றது 3. ஏழைப்பங்காளர் கலைஞர். "ஏழைப்பங்காளர் கலைஞர்" இராமநாதபுரம் மாவட்டத்தில் 21.10.2023 அன்று கருத்தரங்கம், பட்டிமன்றம் நடத்தப்பட்டது மற்றும் கண்காட்சி அரங்கம் திறந்து வைக்கப்பட்டது




4. எழுத்தாளர் கலைஞர். "எழுத்தாளர் கலைஞர்" திருநெல்வேலி 4.11.2023 அன்று நடத்தப்பட்டது.

கலைஞரின் அரும்பங்களிப்பை எடுத்துரைக்கும் விதமாக "முத்தமிழ்த் தேர்" கன்னியாகுமரியில் தொடங்கி பல்வேறு மாவட்டங்கள் வழியாக சென்னை வந்தடைந்தது. 5. பகுத்தறிவு சீர்திருத்தச்செம்மல் கலைஞர் வலூரில் 25.11.2023 அன்று புகைப்படக் கண்காட்சி, கருத்தரங்கம், பகுத்தறிவு சீர்திருத்தச்செம்மல் கலைஞர் விழா மலர் வெளியிடப்பட்டது.

6. தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர். "தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்" மையக் கருத்து பாடல் வெளியீடு மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் கரூர் மாவட்டத்தில் 4.11.2023 அன்று நடத்தப்பட்டது.

7. கலைஞர் பண்பாட்டுப் பாசறை. "கலைஞர் பண்பாட்டுப் பாசறை" கருத்தரங்கம், புகைப்படக் கண்காட்சி வேலூர் மாவட்டத்தில் நடைபெற்றுள்ளது.

8. நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர். "நவீனதமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்" 27.2.2023 அன்று சேலம் மாவட்டத்தில் புகைப்படக் கண்காட்சி, கலை நிகழ்ச்சி, கவியரங்கம் சிறப்பாக நடத்தப்பட்டு விழா மலர் வெளியிடப்பட்டது..

9. நிறுவனங்களின் நாயகர் கலைஞர். "நிறுவனங்களின் நாயகர் கலைஞர்" சென்னை மாவட்டத்தில் 25.11.2023 அன்று கண்காட்சி, கருத்தரங்கம் நடத்தப்பட்டது. மற்றும் நிறுவனங்களின் நாயகர் கலைஞர் மலர் மற்றும் குறும்படம் வெளியிடப்பட்டது.

கலைஞர் கலைஞர். "கலைஞர் கலைஞர்" விழாக்குழுவின் சார்பில் "இசையாய் கலைஞர்" காணொலியுடன் கூடிய மெல்லிசை நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் 8.01.2024 அன்று நடத்தப்பட்டது.

11. தமிழ்த்தாயின் தவப்புதல்வன் கலைஞர். குழுவிற்கு ரூ.25,00,000/ ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் பெயரில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியில் நிரந்தர வைப்பாக வைக்கப்பட்டு, அதன் வருவாயை கலைஞரின் பன்முகத் தன்மையை போற்றும் வகையில் பயன்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

12. சமூக நீதிக் காவலர் கலைஞர். "சமூக நீதிக் காவலர் கலைஞர்" குழு மூலம் கல்லூரிகளில் பல்வேறு வகையான போட்டிகள் நடத்தப்பட்டன

துறைவாரியான நிகழ்வுகள். முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகள் மூலமாகப் பொது மக்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்றுள்ள பல்வேறு பணிகள்.

கூட்டுறவுத்துறை சுய உதவிக் குழுக்களுக்கான கடன், தொழில் முனைவோர்களுக்கான கடன், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன் போன்ற பல்வேறு வகையான கடன்கள் வழங்க முகாம்கள் நடத்தப்பட்டன.

தீயணைப்புத் துறை. தீயணைப்பு துறை சார்பாக 35 மாவட்டங்களில் 100 இடங்களில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் பொதுமக்களுக்குப் மாதிரி மற்றும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத்துறை. 100 மேம்பாலங்களைப் புதுப்பித்தல் மற்றும் மரக்கன்று நடுவிழா நடைபெற்றது.

சுற்றுலாத்துறை. தூய்மைப் பணி முகாம் சுற்றுலாத்துறை சார்பாக 16 மாவட்டங்களில் தூய்மைப் பணி முகாம் நடைபெற்றுள்ளது.

அருங்காட்சியகங்கள் துறை. அருங்காட்சியகங்கள் துறை சார்பாக 10 மாவட்டங்களில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்குப் போட்டிகள் மற்றும் பல்வேறு புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

தோட்டக்கலைத் துறை. கலைஞர் நூற்றாண்டு மலர்க்கண்காட்சி சென்னை செம்மொழிப் பூங்காவில் இளைஞர் நலன் மற்றும் மேம்பாட்டுத் அமைச்சர் ஸ்டாலின் 10.2.2024 விளையாட்டு துறை உதயநிதி அன்று தொடங்கி வைக்கப்பட்டது

தொடர் பணிகள். கலைஞர் நூற்றாண்டுதமிழ் ஊக்குவிப்பு நிதிவழங்குவதற்காக வருவாய் மாவட்ட அளவில் அரசுப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் தமிழ்ப்பாடத்தில் முதல் மதிப்பெண் பெற்ற மாணாக்கர்கள் பட்டியல் சேகரிக்கப்பட்டது.

12 குழுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் இருந்துவிழாநிறைவு அறிக்கை மற்றும் பயனீட்டு சான்று பெறப்பட்டு வருகிறது.

கலைஞர் நூற்றாண்டுப் பசுமைப் பூங்கா சென்னை டாக்டர்.இராதாகிருஷ்ணன். சாலையில் அமைக்கப்பட்டு வருகிறது

மாவட்ட வாரியான நிகழ்வுகள். முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை மாவட்டம் தோறும் சிறப்பாக கலைவிழா, நலத்திட்ட விழா, பரிசளிப்பு விழா என மூன்று நிகழ்வுகளாக அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டன.

விருதுநகர் மாவட்டம். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கும் விழா, மகளிருக்கு இலவச தையல் இயந்திரம் வழங்குதல் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஆகியவை வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றுள்ளது. அரியலூர் மாவட்டம். முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கும் விழா, மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா ஆகியவை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சிவசங்கர் அவர்கள். தலைமையில் நடைபெற்றுள்ளது

கல்லூரிமாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கும் விழா, மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழா ஆகியவை தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் தலைமையில் மதுரை இராஜா முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம். மாவட்ட ஆட்சியர் தலைமையில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம். முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கூட்டுறவுத்துறையின் சார்பில் கடன் மேளா தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நீடாமங்கலம் மக்கள் மன்ற வட்ட அரங்கில் நடைபெற்றது. சிவகங்கை மாவட்டம். சிவகங்கை அரசு மகளிர் கலை கல்லூரியில் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர் திறன் திருவிழாவில் தேர்வான இளைஞர்களுக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் பணிநியமன ஆணைகளை வழங்கினார். 18.8.2024 மாலை 6.50 மணிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நாணயம் சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் வெளியிடப்படுகிறது. இவ்வாறு, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப் பட்டது.

## ரூ.20 லட்சம் வாடகை பாக்கி யுவன் சங்கர் ராஜா மீது புகார்

### விசாரணையை துவங்கிய போலீசார்



சென்னை,ஆக.19–

சென்னை நுங்கம்பாக்கம் லேக் ஏரியா 6வது தெருவில் பஷீலத்துல்ஜமீலா என்பவரின் வீட்டை கடந்த 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வாடகைக்கு எடுத்து அதை யுவன்சங்கர் ராஜா ஸ்டுடியோவாக பயன்படுத்தி வந்துள்ளார். அந்த வீட்டின் மாத வாடகை 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மற்றும் வைப்புத் தொகை 12 லட்சம் ரூபாய் என ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மாத வாடகையை ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளனர். இந்நிலையில் யுவன் சங்கர்ராஜா 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான ரூபாய் 18 லட்சம் வாடகை பணத்தை செலுத்தவில்லை என தெரிகிறது.

இதனால், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் வீட்டின் உரிமையாளரிடம் இருந்து இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜாவுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இதனை அடுத்து, மொத்த வாடகை தொகை யான 18 லட்சம் ரூபாயில் 12 லட்சம் ரூபாய் மட்டுமே காசோலையாக வீட்டின் உரிமையாளரிடம் யுவன் சங்கர்ராஜா வழங்கினார்.மீதமுள்ள 6 லட்சம் ரூபாய், மேலும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இந்த மாதம் வரை வாடகை தொகையான 15 லட்சம் ரூபாய் என மொத்தம் ரூ. 20 லட்சத்திற்கும் மேல் வரை வாடகை பணத்தை கொடுக்கவில்லையாம்.

இதையடுத்து, வீட்டின் உரிமையாளர் ஆன்லைன் வாயிலாக யுவன் சங்கர் ராஜா மீது சென்னை திருவல்லிக்கேணி துணை ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.இதுபற்றி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஈரோட்டில் போலியான அமெரிக்க டாலரைக் கொடுத்து மோசடி

### நைஜீரியா நாட்டைச் சேர்ந்தவர் கைது

ஈரோடு, ஆக.19–

ஈரோட்டில் போலியான அமெரிக்க டாலரைக் கொடுத்து மோசடி செய்த நைஜீரியா நாட்டைச் சேர்ந்தவரை போலீசார் கைது செய்தனர்.

ஈரோடு மாவட்டம் தேவம்பாளையத்தை சேர்ந்தவர் அசோக்குமார். டிராவல்ஸ் தொழிலில் அனுபவம் உள்ள இவர், வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளுக்கு, நாட்டு பணத்திற்கு மாற்றாக இந்திய ரூபாய்களை மாற்றித் தரும் பணியைச்செய்துவருகிறார். இது தொடர்பாக இணையதளங்களில் விளம்பரமும் செய்துள்ளார்.

இந்நிலையில் நைஜீரியா நாட்டைச் சேர்ந்த நாதன் இகேச்சுக்வு என்பவர் அசோக்குமாரை அணுகி, தான் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் தங்கி ஜவுளி தொழில் செய்து வருவதாகவும், மருத்துவ சிகிச்சைக்காக அவசரமாக 500 அமெரிக்க டாலருக்கு மாற்றாக இந்திய ரூபாய்களை வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளார். இதனைத் தொடர்ந்து ஈரோடு வந்த நைஜீரிய நபர், அசோக்குமாரிடம் 500 அமெரிக்க டாலரைக் கொடுத்து விட்டு, அதற்கு மாற்றாக இந்திய மதிப்பில் ரூ. 48 ஆயிரம் பெற்றுள்ளார். நைஜீரியா நபர் கொடுத்த டாலரை அசோக்குமார் ஆய்வு செய்த போது அது போலி எனத் தெரியவந்தது.

இதையடுத்து ஈரோடு எஸ்பி ஜவகரிடம் அசோக்குமார் புகார் அளித்தார். அவரது உத்தரவின் பேரில் நைஜீரியா நாட்டைச் சேர்ந்த நாதன் இகேச்சுக்வுவிடம் விசாரணை மேற்கொண்டனர். இதில் அவர் போலி டாலர் கொடுத்து மோசடி செய்தது உறுதியானது. இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

கோவை காட்டூர் பகுதியில் இதே போல் போலி டாலர் கொடுத்து மோசடி செய்தது தொடர்பாக இவர் மீது ஏற்கனவே ஒரு வழக்கு உள்ளதும் தெரியவந்தது.

## தேநீர் விருந்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றதன் மூலம் திமுக-பாஜக., உறவு வெட்ட வெளிச்சமாகியுள்ளது

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி பேட்டி

கோவை, ஆக.19–

கோவை விமான நிலையத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை தி.மு.க. அரசு கிடப்பில் போட்டு வைத்துள்ளது. அத்திக்கடவு அவினாசி திட்டத்தின் 90 சதவீத பணிகள் அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுவிட்டன. மீதமுள்ள 10 சதவீத பணிகளை 3 ஆண்டுகளாக தி.மு.க. அரசு நிறைவேற்றாமல் இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டப் பணிகள் தி.மு.க. ஆட்சியில் ஆமை வேகத்தில் நடக்கிறது.

தமிழ் தமிழ் என்று மூச்சுக்கு 300 முறை ஸ்டாலின் கூறுகிறார்.



ஆனால் கருணாநிதி நினைவு நாணயத்தில் இந்தி வார்த்தை இருக்கிறது. ஸ்டாலின் குடும்பத்துக்கு என்று வந்தால் இந்தி பற்றி கவலை கொள்ளமாட்டார்கள்.

கவர்னர் தேநீர் விருந்தை தி.மு.க. புறக்கணிப்பதாகக் கூறிவிட்டு அரசு சார்பில் முதல்அமைச்சர் பங்கேற்றது வேடிக்கையாக இருக்கிறது. கவர்னர் தேநீர் விருந்தை தி.மு.க. புறக்கணிக்கும் என்று ஆர்.எஸ். பாரதி கூறியிருந்தார். கருணாநிதி நாணயம் வெளியீட்டு விழாவில் அண்ணாமலை பங்கேற்பதாக அறிவித்ததும் தி.மு.க. நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

கவர்னரின் தேநீர் விருந்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றதன் மூலம் தி.மு.க. பா.ஜ.க. உறவு வெட்ட வெளிச்சமாகியுள்ளது. கருணாநிதி நாணயம் வெளியீட்டு விழாவுக்கு ராகுல் காந்தியை அழைக்காதது ஏன்? டெல்லி தி.மு.க. தேநீர் விருந்தில் பா.ஜ.க. தலைவர் நட்டா பங்கேற்கிறார். ஆனால் ராகுல் காந்தியை அழைக்கவில்லை. நாங்கள் பா.ஜ.க. அணியில் இருந்தபோது கூட, பா.ஜ.க. தலைவர்களை அழைத்துவிழா நடத்தவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆன்லைன் சூதாட்டம் ரூ.400 கோடி மோசடி

சென்னை, ஆக.18

கொல்கத்தாவில் உள்ள கோசிபூர் காவல் நிலையத்தில் இணைய விளையாட்டு சார்ந்த சூதாட்ட செயலிகள் மூலம் பலரை ஏமாற்றியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது.

விசாரணையில், 'பைவின்' சூதாட்ட செயலி மூலம் ரூ.400 கோடி வருவாய் ஈட்டியதும், அவ்வாறு முறைகேடாக ஈட்டப்பட்ட பணத்தை 'பைனான்ஸ்' என்ற சர்வதேச கிரிப்டோ வர்த்தக தளத்தின் மூலம் சீனாவைச் சேர்ந்த நபர்களுக்கு அனுப்பியதும் தெரியவந்தது.

அவை சீனாவில் இருந்து செயல்பட்டு வருவது ஐ.பி. முகவரியை ஆய்வு செய்ததன் மூலம் கண்டறியப்பட்டது.

இந்த மோசடி தொடர்புடைய சென்னை பொறியாளர் உட்பட நால்வரை சட்ட விரோத பணப் பரிவர்த்தனைச் சட்டத்தின்கீழ் கைது செய்தது.

## ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பிரதமர் மோடியுடன் திடீர் சந்திப்பு



அமராவதி, ஆக.19

ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு தற்போது டெல்லி சென்றுள்ளார். அவர் பிரதமர் நரேந்திர மோடியை அவரது இல்லத்தில் நேற்று மாலை சந்தித்தார். அப்போது, ஆந்திர மாநில வளர்ச்சி திட்டங்கள் குறித்து பிரதமரிடம் சந்திரபாபு நாயுடு பேசியதாக கூறப்படுகிறது. போலவரம் அணைக்கட்டு பணியின் மொத்த செலவையும் மத்திய அரசு ஏற்பதாக கூறியதை தொடர்ந்து, அதற்கான நிதி ஒதுக்கீடு குறித்தும், பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட, தலைநகர் அமராவதி வளர்ச்சி நிதியான ரூ.15 ஆயிரம் கோடி குறித்தும் பேசியதாக தகவல் வெளியாகி உள்ளது.

பின்தங்கிய மாவட்டங்கள், இது மட்டுமின்றி ஆந்திராவில் பின்தங்கிய 8 மாவட்டங்களுக்கு வளர்ச்சி நிதி வழங்குவதாக அறிவித்தது குறித்தும் பிரதமரிடம் ஆலோசித்துள்ளார். மேலும், ஆந்திர அரசியல் நிலைமை குறித்தும், ஜெகன் மோகன் ரெட்டியின் மோசமான ஆட்சி குறித்தும் பிரதமரிடம் விவரித்ததாக கூறப்படுகிறது. சந்திரபாபு நாயுடு தனதுடெல்லி பயணத்தை முடித்துக்கொண்டு, இன்று அமராவதி திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## திருச்செந்தூர் அருகே பைக்குகள் மோதிய விபத்தில் இருவர் பலி



திருச்செந்தூர், ஆக. 19

திருச்செந்தூர் அருகே கல்லாமொழி மெயின்ரோட்டில் பைக்குகள் நேருக்குநேர் மோதி கொண்ட விபத்தில் இருவர் பலியானார்கள். ஒருவர் காயமடைந்தார். சம்பவம் குறித்து திருச்செந்தூர் தாலுகா போலீசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

திருநெல்வேலி டவுன் நல்லமுத்தம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த சுப்பிரமணியன் மகன் மகாராஜன்(32), இவர் உடன்குடி அனல்மின்நிலையத்தில் காண்டிரக்ட் அடிப்படையில் எலக்டரீசியனாக பணியாற்றி வந்தார். இவர் நேற்றுகாலை பணி முடிந்து திருச்செந்தூர் நோக்கி பைக்கில் வந்தார். அப்போது திருச்செந்தூர் நடுநாலுமூலைகிணறு காந்திதெரு சேகர் மகன் வனராஜ்(28), அவரது நண்பர் நாகர்கோவில் காதர் ஆகியோர் மற்றொரு பைக்கில் எதிரே சென்றனர். கல்லாமொழி மெயின்ரோட்டில் சென்ற போது, இரு பைக்குகளும் நேருக்கு நேர் மோதியது. இதில் படுகாயமடைந்த மூவரையும் திருச்செந்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தனர். வரும் வழியில் மகாராஜன், வனராஜ் இருவரும் பரிதாபமாக உயிரழந்தனர். காதர் மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். சம்பவகுறித்து தகவல் அறிந்ததும் திருச்செந்தூர் தாலுகா போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி விசாரணை நடத்தி வருகிறார்.

இந்த விபத்தில் பலியான மகாராஜனுக்கு திருமணமாகி நான்கு மாதங்கள் ஆகிறது என்பது குறிப்பிடதக்கது.

## நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா உதகை அரசு சேட் மருத்துவமனையில் மருத்துவர் வினோத்துடன் நேரில் ஆய்வு

நீலகிரி, ஆக.19

நீலகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ் நிஷா உதகை அரசு சேட் மருத்துவமனையில் மருத்துவர் வினோத் அவருடன் ஆய்வு மேற்கொண்டார்

மருத்துவமனையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆய்வுக்கு பின் மருத்துவமனைகளில் மருத்துவர்கள் முறையிடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து காவல்துறை தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார் .

கொல்கத்தாவில் பயிற்சி பெண் மருத்துவர் பாலியல் படுகொலை செய்யப்பட்டதற்கு நாடு முழுவதும் பெரும் எதிர்ப்பு எழுந்து வரும் நிலையில் தமிழகத்திலும் மருத்துவமனைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன இந்த நிலையில் நீலகிரி மாவட்டம் உதகையில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சேட் மகப்பேறு



மருத்துவமனையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என் எஸ் நிஷா நேற்று ஆய்வு மேற்கொண்டார் மருத்துவமனை வளாகம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் இரவு நேரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்னென்ன என்பது குறித்து மருத்துவர்களிடம் கேட்டுடறிந்தார் மேலும் காவல்துறை சார்பில் மருத்துவமனைகளில் மேற்கொண்டுவரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் மருத்துவமனைகளில் இனி காவலர்களும் சுழற்சி முறையில் பணியாற்ற உள்ளதாக காவல்கண்காணிப்பாளர் தெரிவித்தார் மருத்துவமனையில் ஆய்வு மேற்கொண்டபோது ஒவ்வொரு இடங்களாகச் சென்று நேரடியாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் மருத்துவமனையிலுள்ள ஒவ்வொரு அறைகளுக்கும் செல்லும் பாதைகள் மற்றும் நோயாளிகள் வந்து செல்லும் பகுதிகளை பார்வையிட்டார் இந்த ஆய்வின்போது ஏ டி எஸ் பி தங்கவேல் டிஎஸ்பி டவுன் யசோதா ஆய்வாளர் மீனாபிரியா உதவி ஆய்வாளர் சுரேஷ் குமார் போலீசார் உடனிருந்தனர்

## ஆழ்வார்குறிச்சி கல்லூரி முன்னாள் மாணவர் சங்க 23வது பொதுக்குழு கூட்டம்

தென்காசி, ஆக.19–

தென்காசி மாவட்டம் ஆழ்வார்குறிச்சி ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி முன்னாள் மாணவர் சங்க 23ஆவது பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. கல்லூரி சுயநிதிப்பிரிவு கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் எஸ்.வி. பெருமாள் தலைமை வகித்தார். மாணவிகள் கே.ஸ்ருதி கோமதி, ஆர்.சௌந்தர்யா கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து பாடினர். வணிகவியல் இரண்டாமாண்டு மாணவி எஸ்.சௌமியா வரவேற்பு பரதநாட்டியம் ஆடினார். துணைத் தலைவர் ஆர்.எஸ்.சிவராமன் வரவேற்றார். செயலர் முகைதீன் பிச்சை ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் கே.சிவசங்கர் நிதி அறிக்கை வாசித்தார். கல்லூரிச் செயலர் ஜி.தேவராஜன், முதல்வர் எஸ். மீனாட்சி சுந்தர், மாணவர் சங்க முன்னாள் தலைவர் வி.டி.ராஜன், பெங்களூரு மண்டல செயலர் வி.ராமசுப்பிரமணியன், எஸ்.ஹரிகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். சங்கத் தலைவர் எஸ்.வி. பெருமாள் தலைமை உரையாற்றினார். துணைத் தலைவர் எஸ்.தங்கம் சிறப்பு விருந்தினர் அறிமுக உரையாற்றினார்.

தமிழக நில வரன்முறை குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் மாணவர் எல். சுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொடர்ந்து கல்லூரியில் பயின்று 50 ஆண்டுகள் நிறைவடைந்த முன்னாள் மாணவர்கள், கல்லூரியில் பயின்று அரசு மற்றும் வங்கிகளில் பணியில் சேர்ந்த முன்னாள் மாணவர்கள், தேசிய மாணவர்படை மற்றும் நாட்டு நலப்பணித்திட்டங்களில் சாதனைப் படைத்த மாணவர்கள் உள்ளிட்டோருக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளை வணிகவியல் மூன்றாமாண்டு மாணவிகள் எஸ்.அனிகா, கே.ஃபாசியா ஆகியோர் தொகுத்து வழங்கினர். துணைப் பொதுச் செயலர் எஸ்.முருகேசன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் முன்னாள் முதல்வர் சுந்தரம், முன்னாள் பேராசிரியர்கள் வி.மகாதேவன், அ. பழனிவேல், முன்னாள் மாணவர்கள் ஆய்க்குடி அமர்சேவா சங்க நிறுவனர் ராமகிருஷ்ணன், மருத்துவர்கள் முருகையா, மூர்த்தி, குஜராத் உமா ராமகிருஷ்ணன் மற்றும் சென்னை, மதுரை, பெங்களூரு, மும்பை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து முன்னாள் மாணவர்கள், மாணவிகள் குடும்பத்தினருடன் பங்கேற்றனர்.

## சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் கும்பாபிஷேக விழா ஏற்பாடுகள்: ராஜா எம்.எல்.ஏ பார்வையிட்டார்

வாசுதேவநல்லூர், ஆக.19–



தென்தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சிவ ஸ்தலங்களில் சங்கரன்கோவில் சங்கர நாராயணசுவாமி கோயிலும் ஒன்று. இந்தக் கோயில் 11ம் நூற்றாண்டில் உக்கிரபாண்டிய மன்னரால் கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

இந்தக் கோயிலில் ஆண்டுதோறும் ஆடித்தபசு, சித்திரை திருவிழா, திருவாதிரை, ஐப்பசி திருக்கல்யாணம் திருவிழா, நவராத்திரி, கந்த சஷ்டி திருவிழா உட்பட பல திருவிழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதில் 'சிவனும், விஷ்ணும் ஒன்று என்பதை உணர்த்தும் வகையில் கோமதி அம்மனுக்கு சிவபெருமான் சங்கரநாராயணராக காட்சியளித்த வைபவம் ஆண்டுதோறும் ஆடித்தபசு திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

தொடர்ந்து சங்கரநாராயண சுவாமி கோயிலில் தமிழ்நாடு அரசு இந்து அறநிலைத்துறை சார்பில் கும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்யப்பட்டு கும்பாபிஷேக பணிகளுக்காக கடந்த 2022 ஆகஸ்ட் 22 ஆம் தேதி பாலாலயம் நிகழ்ச்சி நடந்தது.

இந்நிலையில் சங்கர நாராயண சுவாமி கோயிலில் வரும் 23ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து 9:45 மணிக்குள் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது கோயிலின் ராஜகோபுரம் மற்றும் சங்கரலிங்க சுவாமி சன்னதி, சங்கர நாராயண சுவாமி சன்னதி, கோமதி அம்மன் சன்னதி விமானங்கள் வர்ணம் பூசும் பணி சண்முகர் சன்னதி சீரமைப்பு, கோயிலின் முன் மண்டபத்திற்கு வர்ணம் பூசும் பணி, அன்னதான கூடம் சீரமைக்கும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாக சாலை பூஜைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கோவிலில் நடந்து வரும் கும்பாபிஷேக விழா ஏற்பாடு பணிகளை தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ராஜா எம்.எல்.ஏ நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து அங்கு நடைபெறும் கும்பாபிஷேகத்திற்கான இறுதி கட்ட ஏற்பாடு பணிகள் குறித்து கோயில் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வின் போது கோயில் துணை ஆணையர் கோமதி, அறங்காவலர் குழு தலைவர் சண்முகையா, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் சீதா லட்சுமி ராமகிருஷ்ணன், வெள்ளைச்சாமி, முத்து லட்சுமி, முப்பிடாதி, நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன், நகர செயலாளர் பிரகாஷ், முன்னாள் நகர செயலாளர் சங்கரன், நகராட்சி கவுன்சிலர்கள் செல்வராஜ், ராஜா ஆறுமுகம், விளையாட்டு மேம்பாட்டு அணி காசிராஜன், மகளிர் அணி சிவசங்கரி, இலக்கிய அணி செல்வராஜ், கோயில் பொறியாளர் முத்துராஜ், கோயில் கண்காணிப்பாளர் ராஜகோபால், மற்றும் வீரா, வெங்கடேஷ் ஜெயகுமார், சண்முகநாதன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## நெல்லை தாமிரபரணியில் மீன்பிடிக்கச் சென்ற 3 பேர் மாயம்: இருவர் மீட்பு

நெல்லை, ஆக.19–

நெல்லை தாமிரபரணி ஆற்றில் மீன்பிடிக்கச் சென்ற 3 பேர் மாயமானதில் இருவர் மீட்கப்பட்டனர்.

நெல்லை பழைய பேட்டையைச் சேர்ந்த மூன்று பேர் நெல்லை சந்திப்பு கொக்கிரகுளம் தாமிரபரணி ஆற்றில் மீன் பிடிக்க வந்தனர்.

அப்போது ஆற்றின் ஆழமான பகுதிக்கு சென்றதில் 3 பேரும் மாயமானார்கள். இவர்களில் இருவர் மீட்கப்பட்டனர். ஒருவர் மாயமானார்.

போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் தேடி வருகின்றனர்.

மீன்பிடிக்க வந்த மூன்று பேரில் 24 வயதான நெல்லை பழைய பேட்டையை சேர்ந்த அப்துல் ரகுமான் என்பவர் மாயமானார்.

காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு துறையினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.



தென்காசி மாவட்டம் ஆழ்வார்குறிச்சி ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி முன்னாள் மாணவர் சங்க 23ஆவது பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழக நில வரன்முறை குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் மாணவர் எல். சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## நெல்லை கண்ணன் நினைவு தினம் அனுசரிப்பு

நெல்லை, ஆக.19–

பட்டிமன்ற பேச்சாளரும் தமிழ் இலக்கியவாதியுமான நெல்லை கண்ணன் 2 ஆம் ஆண்டு நினைவு நாள் நெல்லை டவுண் சந்திப்பிள்ளையார் கோவில் பேருந்து நிறுத்தம் அருகே நாம் தமிழர் கட்சி சார்பில் அனுசரிக்கப்பட்டது.

நிகழ்வை நெல்லை சட்டமன்ற தொகுதி இணைச்செயலாளர் மாரிசங்கர் தலைமை தாங்கி நடத்தினார். மகளிர் பாசறை பொறுப்பாளர் நித்யா, உறுதிமொழி எடுத்து நிகழ்வினை தொடங்கி வைத்தார். புகழ் வணக்கம் கோஷங்களை காளிமுத்து எழுப்பினார்.

இந்த நிகழ்வில் நெல்லை கண்ணன் மகன் சுகா, கிள்ளிகுளம் வேளாண் கல்லூரியின் முன்னாள் பேராசிரியர் நல்லையா துரைராஜ், நெல்லை கண்ணன் வளர்ப்பு மகன் ப.ச.ஆ. குமரேசன், நாம் தமிழர் கட்சி மாவட்ட செயலாளர் கண்ணன், பாளை தொகுதி சக்தி பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொருளாளரும், நாங்குநேரி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ரூபி ஆர்.மனோகரன் மக்கள் பணிக்காக அமெரிக்கா சென்று வெற்றியுடன் சுற்றுப்பயணம் முடித்து தூத்துக்குடி விமான நிலையம் வந்தபோது தமிழ்நாடு காங்கிரஸ் மனித உரிமை துறை மாநில துணை தலைவர் மற்றும் தென் மண்டல பொறுப்பாளர் விவேக்முருகன் ஆள் உயர ரோஜாப்பூ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் நாங்குநேரி பொறுப்பாளர் அழகியநம்பி மற்றும் வட்டார தலைவர் ராமஜெயம், சங்கனாங்குளம் வடிவேல், சிதம்பரம் மற்றும் இட்டமொழி நம்பி, ஆசிரியர் நளன் மற்றும் முத்துகிருஷ்ணன், ஓபையிட், கனகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### குற்றாலம் சாரல் திருவிழா

## தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நாய்கள் கண்காட்சி



தென்காசி, ஆக.19–

குற்றாலத்தில் நடைபெற்று வரும் சாரல் திருவிழாவினை முன்னிட்டு கலைவாணர் கலையரங்கில் நாய்கள் கண்காட்சி தென்காசி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், மாவட்ட கலெக்டர் ஏ.கே. கமல் கிஷோர் அறிவுரைப்படி சிறப்பாக நடைபெற்றது.

நாய்கள் கண்காட்சி பணிகளை தென்காசி கோட்ட உதவி இயக்குநர் மருத்துவர் மகேஷ்வரி தலைமையில் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் ரமேஷ் நாய்களைப் பற்றிய விழிப்புணர்வு வினாடி வினா போட்டி நடத்தப்பட்டு குழந்தைகளுக்கு பரிசளிக்கப்பட்டது.

விழாவில் கால்நடை மருத்துவர்கள் சிவக்குமார், இம்தியாஸ், ஜெயபால் ராஜா, அருண் குமார், கருப்பையா, வசந்தா, சந்திரலேகா ராமசெல்வம் நாகராஜன், அருண் பாண்டியன் கால்நடை ஆய்வாளர்கள் அண்ணாதுரை, சுவாமிநாதன், அருண் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பிச்சையா, ராமையா, முத்துலட்சுமி அடங்கிய குழுவினர் மேற்கொண்டனர்

செங்கோட்டை உதவி இயக்குனர் மருத்துவர் தங்கராஜ் மற்றும் 1962 கால்நடை அவசர சிகிச்சை ஆம்புலன்ஸ் மருத்துவர் சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நடுவர்களாக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக உதவி பேராசிரியர்கள் மருத்துவர் கணேசன் மற்றும் மருத்துவர் கருத்ததுரை ஆகியோர் செயல்பட்டார்கள்.

கண்காட்சியில் தென்காசி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, கன்னியாகுமரி, மதுரை மாவட்டங்களைச் சார்ந்த கன்னி, சிப்பிப்பாறை, ராஜபாளையம், கோம்பை, ஜெர்மன் ஷெப்பர்ட், லேப்ரடர், புல்லி குட்டா, மின்பின், பொமரேனியன், டேஷண்ட், கிரே கவுண்ட்டு, ராட்வீலர், டாபர்மேன், டால்மேசன், லசாப்சோ உட்பட 25 வகையான 186 நாய்கள் கலந்து கொண்டன.

கண்காட்சியின் இறுதியில் ஒவ்வொரு இன நாய்களிலும் சிறந்த நாய்க்கு முதல் பரிசும், பங்கு பெற்ற அனைத்து நாய்களுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளும் வழங்கப்பட்டது. மேலும் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டம் நாட்டின நாய்களில் ஐயப்பன் என்பவருடைய கன்னி நாய்க்கும்,

அயல் நாட்டின நாய்களில் அசோக்குமார் என்பவருடைய லேப்ரடார் இன நாய்க்கும் சிறப்பு பரிசுகள் தென்காசி மாவட்ட நிர்வாகத்தின் மூலம் வழங்கப்பட்டது.



தென்காசி மாவட்டம், ஊர்மேல் அழகியான் அரசு மேல்நிலைப்பள்ளியில் 78 வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. பள்ளி சார்பாக பரிசுகளும் வாலாண்டி வளவு வீரபாண்டி ஐயா சார்பில் பத்தாம் வகுப்பு 11ஆம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு ஆகிய வகுப்புகளில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை பரிசு மாணவர்கள் பெற்ற இடத்திற்கு ஏற்ப வழங்கப்பட்டது. சுமார் ரூ.80 ஆயிரத்திற்கும் மேல் ஊக்கத்தொகை வழங்கி பாராட்டப்பட்டது.

### கொல்கத்தா பெண் மருத்துவர் பாலியல் கொலை

## கண்டணம் தெரிவித்து சிவகிரி வேல்கேர் மருத்துவமனை முழு அடைப்பு.

வாசுதேவநல்லூர், ஆக.19–

கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்தும், நீதிகேட்டும் இந்திய மருத்துவர்கள் சங்கம் சார்பில் நாடு தழுவிய போராட்டத்தில் மருத்துவர்கள் சனிக்கிழமை காலை 6 மணி முதல் நேற்று காலை 6 மணி வரை வேலை நிறுத்தம் செய்து மருத்துவமனைகள் செயல்படவில்லை. இந்திய மருத்துவ சங்கம் இராஜபாளையம் கிளையின் சார்பாக, கொல்கத்தா ஆர் ஜி கர் மருத்துவ கல்லூரியில் முதுகலை பட்ட படிப்பு படித்து வந்த பெண் மருத்துவரின் கொலைக்கு நீதி கேட்டும், சேவை மருத்துவர்கள் மீது நடத்தும் கொலைவெறி தாக்குதலை கண்டித்தும், தென்காசி மாவட்டம், சிவகிரியில் செயல்பட்டு வரும் வேல்கேர் சிறப்பு மருத்துவ மனை மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், சனிக்கிழமை 6 மணி முதல் நேற்று காலை 6 மணி வரையிலும் பணியில் ஈடுபடாமல் வெளி நோயாளிகள் பிரிவுகள் முற்றிலும் செயல்படவில்லை.

## மனிதநேய மக்கள் கட்சி சார்பில் சுதந்திர தின விழா கொண்டாட்டம். சாதனையாளர்களுக்கு கேடயம் வழங்கல்



தென்காசி, ஆக.19–

தென்காசி நகர மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் சுதந்திர தின விழாவை முன்னிட்டு தேசிய கொடியேற்றும் நிகழ்ச்சி விடிஎஸ்ஆர் மஹால் முன்பு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நகர தலைவர் அபாபில் மைதீன் தலைமை தாங்கினார்.

தமுமுக நகர செயலாளர் களஞ்சியம் பீர், நகர பொருளாளர் சாகுல் ஹமீது, நகர துணைத் தலைவர் ஜாபர் ஷரீப், நகர துணைச் செயலாளர்கள் அப்துல் ரஹ்மான், முஸ்ஷவ்வீர், அப்துல் அஜீஸ், ஹபிப் ரஹ்மான், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக தமுமுக மாநில துணை பொதுச் செயலாளர் மைதீன் சேட்கான் கலந்து கொண்டு தேசிய கொடியேற்றி, இந்திய விடுதலைக்காக போராடிய சுதந்திர போராட்ட தியாகங்களை நினைவு படுத்தி சுதந்திர தின உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மத்திய, மாநில அளவில் பென்சாக் சீலாட் மார்சியல் ஆர்ட் போட்டியில் வெற்றி பெற்ற சாதனையாளர்களுக்கு நினைவுக் கேடயம் வழங்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்டத் தலைவர் முகம்மது யாக்கூப் ம.ம.க. மாவட்டச் செயலாளர் சலீம், மாநில செயற்குழு உறுப்பினர் நயினார் முஹம்மது மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர் கோகோ அலி தலைமை கழக பேச்சாளர் கொலம்பஸ் மீரான் வணிகர் அணி மாவட்ட செயலாளர் போரிங் பாதுஷா, ஐபிபி மாவட்ட செயலாளர் அப்துல் முத்தலிப், ஒன்றிய செயலாளர் அப்துல் ரசாக், 22 வது வார்டு நிர்வாகிகள் தலைவர் அமானுல்லாஹ், செயலாளர் மசூது மைதீன், துணைச் செயலாளர் முகம்மது ராசப்பா, மற்றும் வாப்பா சேட், அப்துல் ரஹீம், சுவண தென்றல் சுலைமான், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். ம.ம.க. நகர செயலாளர் ஆதம் பின் ஆஷீக் நன்றியுரை ஆற்றினார்.

## இலக்குப் பந்து போட்டியில் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த வீராங்கனைகள் சாதனை

### கலெக்டர் ஆர்.அழகுமீனா பாராட்டு



நாகர்கோவில், ஆக.19–

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் இலக்குப்பந்து விளையாட்டு போட்டியில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்ற விளையாட்டு வீராங்கனைகள் மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா தெரிவித்ததாவது: கன்னியாகுமரி மாவட்ட இலக்குப் பந்து ஜூனியர் பெண்கள் அணி கடந்த 11.08.2024 அன்று சென்னையில் சவிதா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாநில இலக்குப் பந்து போட்டியில் இரண்டாவது பரிசு பெற்று வெற்றி பெற்றுள்ளார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகள் இதுபோன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெறுவதோடு, நமது மாவட்டத்திற்கும், மாநிலத்திற்கும் பெருமை சேர்த்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அலுவலர் ராஜேஷ், கன்னியாகுமரி மாவட்ட இந்து சமய அறங்காவலர் குழு தலைவர் பிரபா. ஜி.ராமகிருஷ்ணன், கன்னியாகுமரி மாவட்ட இலக்குப் பந்து கழகத் தலைவர் சுவாமி பத்மேந்திரா, டாக்டர். ப.மகேஷ் (செயலாளர்), வெங்கடேஷ் (துணை பயிற்சியாளர்), தினேஷ் செல்லையா (துணை மேலாளர்), பணியாளர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

வருவாய் கோட்டாட்சியர் (ம) உட்கோட்ட நடுவர் மன்றம், தென்காசி

ந.க.ஆ.2/இ.ப.எண்.94/2024

பொ.தங்கமணி,
த/பெ.பொன்னுச்சாமி,
3/33, கிருஷ்ணன் கோவில் தெரு,
மேலக்கலங்கல் கிராமம்,
வீரகேரளம்புதூர் வட்டம். ...மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் தனது தாயார் சாமித்தாய் என்பவர் கடந்த 04.05.2017 அன்று 3/33, கிருஷ்ணன் கோவில் தெரு, மேலக்கலங்கல் கிராமத்தில்வைத்து இறந்ததை பதிவு செய்ய அறியாமையால் தவறிவிட்டார். மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் இது கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்: பொ.தங்கமணி,
மேலக்கலங்கல் கிராமம்,
வீ.கே.புதூர்.

வருவாய் கோட்டாட்சியர் (ம) உட்கோட்ட நடுவர் மன்றம், தென்காசி

ந.க.ஆ.2/இ.ப.எண்.95/2024

பொ.தங்கமணி,
த/பெ.பொன்னுச்சாமி,
3/33, கிருஷ்ணன் கோவில் தெரு,
மேலக்கலங்கல் கிராமம்,
வீரகேரளம்புதூர் வட்டம். ...மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் தனது தகப்பனார் பொன்னுச்சாமி என்பவர் கடந்த 15.09.2009 அன்று 3/33, கிருஷ்ணன் கோவில் தெரு, மேலக்கலங்கல் கிராமத்தில்வைத்து இறந்ததை பதிவு செய்ய அறியாமையால் தவறிவிட்டார். மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனையிருந்தால் இது கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்: பொ.தங்கமணி,
மேலக்கலங்கல் கிராமம்,
வீ.கே.புதூர்.

# மதுரை மாநகராட்சி பகுதிகளில் மழையினால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, ஆணையாளர் தினேஷ்குமார் ஆகியோர் நேரில் ஆய்வு



மதுரை, ஆக.19

மதுரை மாநகராட்சி பகுதிகளில் மழையினால் சேதமடைந்த முக்கிய சாலைகள் சீரமைக்கும் பணிகளை மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா, ஆணையாளர் தினேஷ்குமார் ஆகியோர் ஆய்வுமேற்கொண்டனர்.

மதுரை மாநகராட்சி பகுதிகளில் கடந்த மூன்று நாட்களாக பெய்த மழையினால் மாநகரப் பகுதியில் உள்ள முக்கியமான சாலைகள் சேதமடைந்து போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக இருந்தது. மதுரை மாநகராட்சி முக்கியமான சாலைகளை சீரமைக்க பணிகளைபொறியாளர் உடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு முக்கியமான சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகள் சீரமைக்கும் பணிகள் தொடர்ந்துமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி நேறு மதுரை மாநகராட்சிமேல மாரட் வீதி, மேலவெளிவீதி, டிபிகேரோடு, பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள தமிழ்நாடு ஓட்டல் அருகில் மேலவாசல் திடீர் நகர் பகுதி, மேலவெளி வீதி குட்செட் தெரு அருகில், பாலம் ஸ்டேஷன் ரோடு, சிம்மக்கல் மீனாட்சி கல்லூரி பாலம், கோரிப்பாளையம் சந்திப்பு உள்ளிட்ட பல்வேறு முக்கியமான சாலை பகுதிகளில் சாலைகள் சீரமைக்கும்பணிகளைமாவட்ட ஆட்சி தலைவர், மாநகராட்சி ஆணையர் ஆகியோர் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். மதுரை மாநகராட்சிபகுதியில் உள்ள இதர சாலைகள் சீரமைக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இந்த ஆய்வில் போது தலைமை பொறியாளர் ரூபன் சுரேஷ், செயற்பொறியாளர்கள் பாக்கியலட்சுமி, சேகர், உதவி செயற்பொறியாளர்கள் மயிலேரிநாதன், காமராஜ் உதவிபொறியாளர்கள்மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உடுமலை - பள்ளபாளையம் வேதவியாஸ் வால்டாரப் பள்ளியில் நடத்தபட்ட இந்திய வண்டி உணவுப்பண்டிகை




உடுமலை, ஆக.19

திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்தபள்ளபாளையத்தில் இயங்கிவரும் வேதவியாஸ் வால்டாரா பள்ளியில் டேஸ்ட் ஆப் பாரத் மூலம் இந்திய வண்டி உணவுப்பண்டிகை மிக விமர்சையாக நடந்தது.

வேதவியாஸ் பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து 8 மாநிலங்களின் பாரம்பரிய உணவு பதார்த்தங்களை தயாரித்து பெற்றோர்களுக்கு வழங்கினர் சுய கலைகளில் ஒன்றானசமையல்கலைபள்ளியில் பாட திட்டத்தில் ஒன்றாக பிணைந்துள்ள நிலையில் மாணவச்செல்வங்கள் மிகுந்த உற்சாகத்துடன் உணவு வகைகளை தயாரித்தனர்.

மகாராஷ்டாவின்நிம்புபாணி, ராஜஸ்தானின் சுருமா லட்டு, மத்திய பிரதேசத்தின் இந்தோரி போகா, காஷ்மீரின் காவா, கர்நாடகத்தின் கேசரிவாத், தமிழகத்தின் சேலம் நொருக்கல், மேற்கு வங்கத்தின் ஜல்மோரி போன்ற பதார்த்தங்கள் ஸ்டால்களில் ஸ்லைடிங் ஸ்கேல் முறையில் விற்பனை செய்யப்பட்டடது.

உணவு உண்பதால் மட்டும் உணவல்ல உழைப்பின் விளைவால் உண்பதே உணவு என்பதை உணர்த்தும் மகத்தான வால்டார்ப் பாடதிட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கும் குழைந்தைகளுடன் ஒன்றாக சேர்ந்து செயல்பட்ட ஆசிரியர்களுக்கும் விழாவில் பங்கு பெற்ற பெற்றோருக்கும் இறுதியாக வேதவியாஸ்வால்டார்க்பள்ளி நிறுவனம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்திய திருநாட்டின் பன்முக கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் பல்வேறு உணவு வகைகளை குழந்தைகளும் கற்று அனைவருக்கும் சுவையாக தயாரித்துக்கொடுத்தது பாராட்டுக்குரியதாய் அமைந்திருந்தது.

# சமயநல்லூர் அருகே நிலுவைத் தொகையை வழங்க கோரி ஆலையை முற்றுகையிட்ட தொழிலாளர்கள்



சோழவந்தான், ஆக.19

மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே ,தேனூர் ஊராட்சிக்கு உட்பட்ட கட்டப்புளி நகர் பகுதியில் உள்ள, சீலா ராணி டெக்ஸ்டைல் தனியார் மில்லில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு பணியாற்றிய சுமார் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டியதொகையான 6:45 கோடியை உடனடியாக வழங்ககோரி 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஆலையை முற்றுகையிட்டதால், பரபரப்பு ஏற்பட்டது. இங்கு, 2006 ஆம் ஆண்டுக்கு முன்பு பணியாற்றிய தொழிலாளர்களுக்கு, ஆலை நிர்வாகம் தர வேண்டிய பணத்தை இதுவரை தரவில்லை என கோரி, சி.ஐ.டி.யு. மதுரை மாவட்ட செயலாளர் அரவிந்தன் தலைமையில் 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்று காலை ஆலை முன்பு திரண்டனர். இவர்கள், தங்களுக்கு நிர்வாகம் தரவேண்டிய தொகையை உடனடியாகவழங்கவேண்டும் என கோரி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

.அதனைத் தொடர்ந்து, 11 மணிக்கு மேல் ஆலை நிர்வாகம் சார்பாக பேச்சு வார்த்தைக்கு வந்தவர்கள் சிஐடியு தொழிற்சங்கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். முடிவில் 19 8 2024 நாளை சீனியாரிட்டி அடிப்படையில் முதல் 52 நபர்களுக்கு அவர்களின் நிலுவைத் தொகையை தருவதாகவும் அடுத்த சில வாரங்களில்தொடர்ச்சியாகமீதி உள்ளவர்களுக்கும்நிலுவைத் தொகையைவழங்குவதாகவும், கூறியுள்ளதாக கூறினார். இதன் காரணமாக, தொழிற்சாலைமுன்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தற்காலிகமாக போராட்டத்தை வாபஸ் பெற்று கலைந்து சென்றனர்.



மதுரை, பந்தடி 5வது தெரு அருள்மிகு ஸ்ரீ ஆதிசிவன் திருக்கோயில் சனி மஹா பிரதோஷத்தை முன்னிட்டு ஆரஞ்சு பழ அலங்காரத்தில் அருள் பாலித்த சிவன்.

# வயிற்று வலியால் மாணவன் சாவு

நத்தம், ஆக, 19

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே காசம்பட்டியை சேர்ந்தவர் ஆண்டிச்சாமி (40). இவரது மகன் அபிசேக் (15). கோயம்புத்தூரில் உள்ள அரசு பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தான். இவர் கடந்த ஒரு மாத காலமாக தீராத வயிற்று வலி இருந்து அவதிப்பட்டு வந்துள்ளார். இந்நிலையில் விடுமுறைக்காககாசம்பட்டிக்கு வந்த அபிசேக்கிற்கு நேற்று முன்தினம் வயிற்று வலி அதிகரித்து மயங்கி விழுந்தார். உடனடியாக அவரது பெற்றோர்கள் அவரை மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் அபிசேக் இறந்து விட்டார். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்

## வீ.கே.குருசாமி தரப்பினரை

# கொலை செய்வதற்காக கத்தியுடன் காத்திருந்தவர் மதுரையில் கைது

மதுரை, ஆக.19

மதுரை மாநகர் சோலையழகுபுரம் இந்திராநகர் 3ஆவது தெரு பகுதியில் ஜெய்ஹிந்த்புரம் காவலதுறையினர் ரோந்து பணியின் போது அந்த பகுதியில் சந்தேகத்துகுரிய வகையில் நின்றுகொண்டிருந்த மலையாளபாண்டியை பிடித்து விசாரணை செய்து சோதனையிட்டனர்.

மலையாளபாண்டி வாள் ஒன்றை உடலில் பதுக்கிவைத்திருப்பதை பார்த்து அதனை ஜெய்ஹிந்த்புரம் காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.இதையடுத்து காவல்துறையினர் விசாரணை நடத்தியபோது மலையாளபாண்டி வெள்ளைக்காளியின் கூட்டாளி என்றும், 6 மாதத்திற்கு முன் வெள்ளைக்காளியின் ஆதரவாளர்கள் பெங்களூரில் வைத்து வி.கே.குருசாமியை வெட்ட முயன்றதாகவும், அதன் காரணமாக வி.கே.குருசாமியின் ஆட்களால் எதுவும் ஏற்பட்டுவிடும் என அச்சத்திலும், வி.கே.குருசாமியின் மருமகன் காட்டுராஜாவை கொலை செய்ததற்காக பதிலுக்கு காட்டுராஜா தரப்பு என்னை திரும்ப கொலை செய்ய திட்டமிட்டிருப்பதால் காட்டுராஜா தரப்பைச் சேர்ந்தவர்களை கொலை செய்வதற்காக வாளுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

இதனையடுத்து மலையாளபாண்டியை கைது செய்த ஜெய்ஹிந்த்புரம் காவல்துறையினர் வாளினை பறிமுதல் செய்து சிறையில் அடைத்தனர்.

# காந்தி அருங்காட்சியகத்தின் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடப்பு கல்வியாண்டின் யோகா படிப்பு தொடக்க விழா



மதுரை, ஆக.19

காந்தி அருங்காட்சியகத்தின் காந்திய கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தில் நடப்பு கல்வியாண்டின் டிப்ளமோ, முதுகலை டிப்ளமோ யோகா படிப்பு தொடக்க விழா அருங்காட்சியகத்தின் ஐ. ஜி. எஸ். ஆர் அரங்கில் இன்று நடைபெற்றன. அருங்காட்சியக செயலாளர் கே. ஆர். நந்தாராவ் தலைமை வகித்தார். இவர் தனது தலைமை உரையில் “மாணவர்கள் யோகாவை முழுமையாககற்றுக்கொண்டு அதை சமுதாய நலன், மேம்பாட்டிற்கு பயன்படுத்த வேண்டும்“ என்று கூறினார்.

ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வர் முனைவர் ஆர். தேவதாஸ் தொடக்க உரை .நிகழ்த்தினார்.இவர் தனது உரையில்” தினந்தோறும் காலை மாலையில் யோகா பயிற்சிமேற்கொள்வதின்மூலம் அலைபாயும் எண்ணங்களை கட்டுப்படுத்த முடியும். மேலும் மன இறுக்கம் இல்லாமல் மகிழ்ச்சியாக வாழ முடியும்“ என்று கூறினார். மதுரை மாவட்டம்திருமங்கலம்துணை தபால் நிலையத்தின் உதவி துணை போஸ்ட் மாஸ்டர் திருமதி வி. பிரியா சிறப்பு விருந்தினராககலந்துகொண்டு “அமைதி மற்றும் முழுமை ஆரோக்கியத்திற்கானயோகா” எனும் தலைப்பில் பேசினார்.

இவர் தனது உரையில் “யோகாகலையின் வரலாற்றை எடுத்துக் கூறி நம்முடைய உடல், மன ஆரோக்கியத்திற்கு யோகா பெரிதும் துணை புரிகிறது. தனிமனித, சமுதாய அமைதிக்கு யோகாவை அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும் “என்று கூறினார்.மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் உடற்கல்வித்துறையின் பேராசிரியர் முனைவர் சி.ரமேஷ் வாழ்த்துரை வழங்கினார் இவர் தனது வாழ்த்துறையில்”இன்றைய சூழலில் அனைவரும் குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் ஒழுக்கத்துடன் வாழ யோகா மிகவும் துணை புரிகிறது. மேலும் தன்னை அறிதலும் யோகா மூலம் சாத்தியமாகிறது” என்று கூறினார். தொடர்ந்துமதுரையில் அமைந்துள்ள இக்னோ மண்டல அலுவலகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற உதவி பதிவாளர் முனைவர் ஆர். முத்தானந்தம் வாழ்த்துரை வழங்கினார். இவர் தனது வாழ்த்துறையில் “எல்லா மதங்களும் யோகா, தியானங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஆகவே இத்தகைய யோகாவை கற்றுக்கொள்வதன் மூலம் ஒரு சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்“ என்று கூறினார். முன்னதாக யோகா ஆசிரியை நந்தினி அனைவரையும் வரவேற்றார். நிறைவாக யோகா ஆசிரியர் பழனிக்குமார் நன்றியுரை வழங்கினார்.

நிகழ்வில் யோகா மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காந்திய கல்வி ஆராய்ச்சி நிறுவனம் செய்து இருந்தது.



மதுரை மாவட்டம் மேலமாசி வீதியில் உள்ள சூடம் சாம்பிராணி தெருவில் இயங்கி வந்த ஸ்வீட் தயார் செய்யும் கட்டிடம் இடிந்து விழுந்தது.

# தெருநாய் கடித்து ஐந்து பேர் காயம்

மதுரை, ஆக.19

மதுரை திருமோகூர் அருகே உள்ள குமரன் நகர் 4வது தெருவில் வசித்து வருபவர் ராஜ பாண்டி. இவர் மகன் எட்டாம் வகுப்பு படித்து வரும் மாணவன் (ஆகாஷ் பாண்டி வயது.13). இவர் வீட்டிற்கு சென்ற போது இன்று (ஆக.17) தெரு நாய் கடித்தது. இதனால் உடலில் சிறிது காயம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அவரை மீட்டு, யானைமலை ஒத்தக்கடை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

## கருப்புசாமி குத்தகைகாரர் பட பாணியில்


# வண்டி நிறுத்த ரூ.200க்கு டோக்கன் கரிமேட்டில் கத்தியுடன் ரவுடி கைது

மதுரை, ஆக.19

மதுரை மாநகர் பெத்தானியாபுரம் அண்ணா வீதி பகுதியில் சுரேஷ் என்ற ஆட்டோ ஓட்டுனர் தனது ஆட்டோவை சாலையோரம் நிறுத்திவைத்தபோது அங்கு வந்த அதே பகுதியை சேர்ந்த தனபாரதி (எ) பாண்டியராஜன் ஆட்டோவை நிறுத்தக்கூடாது என திட்டியதோடு தான் இந்த ஏரியா ரவுடி பல கேசுல ஜெயிலுக்கு போய்வந்தவன் இங்க யார் வணடியை நிறுத்தினாலும் எனக்கு 200 ரூபாய் மாமூல் கொடுக்கவேண்டும் என கூறி பட்டாக்கத்தியை எடுத்து கழுத்தில் வைத்து வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்துவிட்டுசென்றுள்ளார்.இதனையடுத்து ஆட்டோ ஓட்டுனர் அளித்த புகாரின் கீழ் கருப்புசாமி குத்தகைகாரர் பட காமெடி ஸ்டைலில் 200 ரூபாய் டோக்கன் போடனும் என கூறி பட்டாகத்தியை காட்டி மிரட்டியதாக காமெடி ரவுடியான தனபாரதி (எ) பாண்டியராஜனை கரிமேடு காவல்துறையினர் கைது செய்து பட்டாக்கத்தியை பறிமுதல் செய்தனர்.



மதுரை செல்லூரில் 3ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் உறுப்பினர் அடையாள அட்டைகளை முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஜெ.ராஜா, அண்ணாதுரை, எம்.எஸ்.பாண்டியன், குமார், கவுன்சிலர் மாணிக்கம் , பாஸ்கரன், பி.ஆர்.செல்வக்குமார் எஸ்.எம்.டி.ரவி மற்றும் பலர் உள்ளனர்.



ஈரோடு காளிங்கராயன் பாளையத்தில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் பங்கேற்று ஓடிய இளைஞர்கள் மற்றும் பெண்கள்.

# சாத்தமங்கலத்தில் முதியோர் இல்ல கட்டிட பணிக்கு பூஜை




மேலூர் ஆக.19

மனித உரிமை அமைப்புகள் தொண்டு நிறுவனம் மற்றும் அதன் சர்வதேச அமைப்பின் சார்பில் மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் சாத்தமங்கலம் கிராமம் மீனாட்சிபுரத்தில் நேற்று காலை 11மணியளவில் முதியோர் இல்லத்திற்கான புதிய கட்டிடதிற்கு அதன் நிறுவனர் முஸ்தபா பட்டாம்பி தலைமையில் பூமி பூஜை போடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம், பொதுச் செயலாளர் இருளப்பன், மேலூர் நகர் மன்ற தலைவர் முகமது யாசின், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் சூர்யகலா கலாநிதி, நாட்டரசன் கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் மாரிமுத்து, மனித உரிமைகளம்நுகர்வோர் அமைப்புநிறுவனர் பிரபாகரன், வழக்கறிஞர் முகமது ஷினான், மற்றும் சாத்தமங்கலம் ஜெயகுமார், பொறியாளர் வசந்த், நிலக்கிழார் சொக்கலிங்கம், கிராம அம்பலகாரர்கள் கணேசன், சுப்பிரமணி, துரை ராஜ் மற்றும் அமைப்பின் மாவட்ட தலைவர் வனிதா, ஹெச். ஆர். ஓ. சி எஸ். நிர்வாகிகள் பணியாளர்கள் கிராம பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# தண்ணீர் தொட்டியில் விழுந்து சிறுமி பலி

தாளவாடி, ஆக. 19

ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே ஆசனூர் ஊராட்சியில் உள்ள கீழ்மாவள்ளம் கிராமத்தில் மகாதேவன், கனகா தம்பதியினர் வசித்து வருகின்றனர். இவர்கள் கூலி வேலை செய்து வருகின்றனர். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இந்த நிலையில் நேற்று மாலை மகாதேவன், கனக தம்பதியினர் அருகிலுள்ள தோட்டத்திற்கு கூலி வேலைக்கு சென்றுள்ளனர். அப்போது இரண்டாம் வகுப்பு படித்து வரும் சிறுமி அகல்யா அருகில் இருந்த சிறுமிகளுடன் வீட்டில் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக வீட்டுக்குள் இருந்த 6 அடி ஆழ தண்ணீர் தொட்டிக்குள் தவறி விழுந்துள்ளார். சக சிறுமிகள் அருகில் இருந்தவர்களுக்கு தகவல் அளித்துள்ளனர். மேலும் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த அகல்யாவின் பெற்றோருக்கும் தகவல் அளித்தனர்.

குழந்தையை மீட்ட அவர்கள் சிறுமியை தூக்கிக் கொண்டு அருகில் இருந்த ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு அழைத்து சென்றனர். அங்கு குழந்தையை பரிசோதித்த மருத்துவர் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தார்.



மதுரை அப்போலோ மருத்துவமனையில் பிரெஸ்ட் கிளினிக் மார்பக நல சிகிச்சை மையத்தை துவக்கி வைத்த வந்திருந்த ஆட்சியர் சங்கீதாவுக்கு, அப்போலோ மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி நீலகண்ணன் பூங்கொத்து வழங்கி வரவேற்றார். உடன் மகளிர் தொழில்முனைவோர் (WE) அமைப்பின் தலைவர் ராஜகுமாரி ஜீவகன் .



தருமபுரி மாவட்ட விளையாட்டரங்கில், விளையாட்டு விடுதி மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை குறித்தும், உணவு சமைப்பதற்கு வழங்கப்படும் பொருட்கள் இருப்பு குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் சாந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தே.சாந்தி உள்ளார்

பௌர்ணமி தினத்தையொட்டி

## திருச்செந்தூர் முருகன் கோவிலில் பாதுகாப்பு ஏற்பாடு குறித்து தூத்துக்குடி எஸ்.பி., ஆல்பர்ட் ஜான் ஆய்வு



திருச்செந்தூர், ஆக.19

உலகப்புகழ்பெற்ற திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு பௌர்ணமி தினத்தையொட்டி வரும் பக்தர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தூத்துக்குடி எஸ்.பி ஆல்பர்ட் ஜான் ஆய்வு மேற்கொண்டார்.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான உலகப்புகழ்பெற்ற திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமிகோவிலில் பௌர்ணமிதினத்தையொட்டி பல லட்சக்கணக்கான பக்தர்கள் வரக்கூடும் என்பதால் அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுவருகிறது. சிறந்த பரிகாரஸ் தலமாக இருக்கக்கூடிய இங்கு பௌர்ணமிதினத்தில்கோவில் வளாகம் மற்றும் கடற்கரை பகுதிகளில் தங்கியிருந்து பௌர்ணமி பூஜை செய்து வழிபட்டால் நினைத்த காரியங்கள் நிறைவேறும் என சில ஜோசியர்கள் சமூக வலைதளங்களில் தெரிவித்தனர்.

இதனையடுத்து கடந்த சில பௌர்ணமி தினங்களாக பல லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து பரிகார பூஜைகள் செய்து வழிபட்டு வருகின்றனர். அந்த வகையில் ஆவணி மாதத்திற்கான பௌர்ணமி வரும் திங்கள்கிழமை வருவதையொட்டி சுமார் 3 லட்சத்திற்கும் மேலான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து

வழிபாடு நடத்த வரும் பக்தர்களுக்கான ஏற்பாடுகள் குறித்து தூத்துக்குடி மாவட்ட காவல்துறைகண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் ஆய்வு மேற்கொண்டார். கோவில் வளாகம், தரிசன வரிசைகள், கடற்கரை பகுதிகளை பார்வையிட்டு பக்தர்களுக்கு தேவையானவசதிகள்குறித்தும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்து கோவில் நிர்வாகத்தினரிடம் கேட்டறிந்தார்.

## பிஞ்சிவாக்கம் புதுமாவிலங்கை வயலூர் ஊராட்சிகளில் 78 வது சுதந்திர தின சிறப்பு கிராம சபை கூட்டங்கள்



திருவள்ளூர் ஆக.19

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம் பிஞ்சிவாக்கம் புதுமாவிலங்கை வயலூர் ஊராட்சிகளில் கிராம சபைகூட்டங்கள்நடைபெற்றது

பிஞ்சிவாக்கம்ஊராட்சிமன்ற அலுவலகத்தில்ஊராட்சிமன்ற தலைவர் உமாமணிகண்டன் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட சுகாதார பணிகள் துணை இயக்குனர் பிரியா ராஜ்கலந்துகொண்டுசுகாதார விழிப்புணர்வுகுறித்துபேசினார் வட்டாரமருத்துவர் டில்லிபாய் ஹெல்த் கண்காணிப்பாளர் ராஜேந்திரன் (ம) ஊராட்சி மன்றதுணைத்தலைவர்வார்டு உறுப்பினர்கள்திரளாககலந்து கொண்டனர் அதேபோல புதுமாவிலங்கை ஊராட்சி அகரம் கிராமம் ஈஸ்வரன் கோவிலில்கிராமசபைகூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் பா தனலட்சுமி பாண்டியன் தலைமையில்நடைபெற்றது துணைத்தலைவர் சிவகுமார் (ம) விடுதலை சிறுத்தைகள் கடம்பத்தூர் ஒன்றிய செயலாளர் சுரேஷ் (ம) வார்டு உறுப்பினர்கள் கிராம பொதுமக்கள் மகளிர் சுயஉதவி குழுவினர் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அதேபோலவயலூர்ஊராட்சி உச்சிமேடு கிராமத்தில் கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்றதலைவர் அஞ்சலாட்சி ராமகிருஷ்ணன்தலைமையில் நடைபெற்றது

கடம்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் சுஜாதா சுதாகர் துணைத்தலைவர் யோகலட்சுமி சுதாகர் ஆகியோர் முன்னிலைமேலும் இதில் பற்றாளர் வள்ளியம்மா கிராம பொதுமக்கள் மகளிர் சுய உதவி குழுவினர் வார்டு உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர் இந்த மூன்று ஊராட்சிகளிலும் ஊராட்சி மன்றதலைவர்கள்காலையில் அந்தந்த ஊராட்சியிலுள்ள அரசு பள்ளிகளில் 78 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மூவர்ண தேசிய கொடி ஏற்றி வைத்து மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் வீணாக பீறிட்டு வரும் குடிநீர்...

## நடவடிக்கை எடுக்க தேசிய ஊழல் எதிர்ப்பு கழக அமைப்புச் செயலாளர் தங்கப்பாண்டியன் கோரிக்கை

ஒட்டன்சத்திரம்,ஆக.19

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் ஆங்காங்கே வீணாக பீறிட்டு வரும் குடிநீரால் பொதுமக்கள் பாதிப்பு நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு தேசிய சட்ட உரிமைகள் கழகம், தேசிய ஊழல் எதிர்ப்புகழகமாநில அமைப்பு செயலாளர் கே.தங்கப் பாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கோரிக்கையில் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம்நகராட்சியில் 1முதல் 18 வார்டுகளில் பொதுமக்கள் சுமார் 50 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இங்கு பிரபலமான பேருந்து நிலையம், மார்க்கெட், பள்ளி, கல்லூரிகள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் என ஏராளம் உள்ளது.

இந்நிலையில் ஒட்டன் சத்திரம் பகுதியில் காவேரி கூட்டுக் குடிநீர், நகராட்சி குடிநீர் ஆகியவற்றின் பைப் லைன் பதிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது முறையாக பராமரிக்காததால் குறிப்பாக ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையம் அருகே உள்ள சிவா தேநீர் கடை, நாகர் ஹோட்டல், கே.வி.எ பெட்ரோல் பங்க் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பைப் லைன் சேதமாகி குடிநீர் வீணாக பீறிட்டு செல்கிறது. இதனால் பொதுமக்களுக்கு முறையாக கிடைக்க வேண்டிய பாதுகாக்கப்பட்ட குடிநீர் சென்று சேருவதில் காலதாமதம் ஏற்படுவதோடு மன உளைச்சலும் ஏற்படுகிறது. எனவே ஒட்டன்சத்திரம் நகராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து பாதுகாக்கப்பட்ட குடிநீரை உரிய காலத்தில் மக்களை சென்றடைய வழிவகை செய்யவேண்டுமென தெரி வித்துள்ளார்.



முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியின் முன்னாள் மாணவர் சங்க ஆலோசனைக்கூட்டம் தலைமை ஆசிரியர் சந்தனவேல் தலைமையில் ராமகிருஷ்ணன் ஆகிரியர், ஏனாதிவீரபாண்டியன், துணை தலைமை ஆசிரியர் சரவணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் ராமர் அனைவரையும் வரவேற்றார். ஆலோசனை கூட்டத்தில் பள்ளியின் வளர்ச்சி குறித்தும், முன்னாள் மாணவர்கள் அனைவரையும் உறுப்பினர்களாக சேர்ப்பது என தீர்மானிக்கப்பட்டன.சுரேஷ் காந்தி, நாகமுத்து, வினோத், ரமேஷ், யுவராஜ் ஆகியோர் கூட்டதில் கழந்து கொண்டனர்.

## டிஎஸ்பி மியூச்சுவல் ஃபண்டின் புதிய நிதி திட்டம் அறிமுகம்

கோவை, ஆக. 19

டிஎஸ்பி மியூச்சுவல் ஃபண்ட் இந்தியாவின் முதல் நிஃப்டி டாப் 10 ஈக்வல் வெயிட் இன்டெக்ஸ் ஃபண்ட் அண்ட் ஈடிஎஃப்ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இதுநிஃப்டியில் உள்ள முதல் 10 இந்திய நிறுவனங்களில் இலவச ஃப்ளோட் மார்க்கெட் கேபிடலைசேஷன் மூலம் சமமாக முதலீடு செய்யும். டிஎஸ்பி நிஃப்டி டாப் 10 ஈக்வல் வெயிட் இன்டெக்ஸ் ஃபண்ட் மற்றும் டிஎஸ்பி நிஃப்டி டாப் 10 ஈக்வல் வெயிட் ஈடிஎஃப்க்கான புதிய ஃபண்ட் ஆஃபர் ஆகஸ்ட் 16, 2024 அன்று சந்தாவுக்குத் திறக்கப்பட்டு ஆகஸ்ட் 30, 2024 அன்று நிறைவடையும்.

நிஃப்டி டாப் 10 ஈக்வல் வெயிட் இன்டெக்ஸ் 16 ஆண்டுகளில் 9 ஆண்டுகள் பரந்த சந்தையை விஞ்சியுள்ளது.போர்ட்ஃபோலியோ தரத்தைப் பொறுத்தவரை, நிஃப்டி டாப் 10 ஈக்வல் வெயிட் இன்டெக்ஸ் நிஃப்டி 500 இன்டெக்ஸை விட 1.5 மடங்கு அதிக ஈக்விட்டி வருமானத்தைக் கொண்டுள்ளது. 2024 நிதியாண்டின் தரவுகளின் அடிப்படையில், நிஃப்டி 50 பங்குகளின் லாபத்தில் 49 சதவிதம் நிஃப்டி டாப் 10 ஈக்வெல் வெயிட் இண்டெக்ஸ்ஆல் பங்களிக்கப்படுகிறது. டிஎஸ்பி மியூச்சுவல் ஃபண்ட் சிஎஃப்ஏ பேசிவ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அண்ட் தயாரிப்புகளின் தலைவர் அனில் கெலானிபேசுகையில், "ஒப்பீட்டளவில் குறைந்த மதிப்பீடு மற்றும் பாதுகாப்பின் விளிம்பு இருக்கும் இடங்களில் முதலீடு செய்வது எப்போதும் சிறந்தது என்று முதலீட்டு கொள்கைகள் தெரிவிக்கின்றன. நிஃப்டி டாப் 10 ஈக்வல் வெயிட் இண்டெக்ஸ் நீண்ட கால போர்ட்ஃபோலியோக்களின் ஒரு பகுதியாக இருக்க முடியும். ஏனெனில் இது பெரிய நிறுவனங்களுக்கு பல வாய்ப்புகளை வழங்குகிறது, இது வீழ்ச்சியின் போது டிராடவுன்களைக் குறைக்க உதவுகிறது மற்றும் நீண்ட காலத்திற்கு சிறந்த வருவாயை உருவாக்க முடியும்" என்றார்.

## திருமாவளவன் பிறந்த நாள் விழா



ஒட்டன்சத்திரம்,ஆக.19

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட இடையகோட்டை முகாமில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் தொல்.திருமாவளவன் 62வது அகவை தின விழா விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஒட்டன்சத்திரம் ஒன்யி பொருளாளர் மக்கள் போராளி சு.வடிவேல் தலைமையில் இடையகோட்டை கொடி ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பேனா, பென்சில், நோட்டு, புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கியும், ஏழை, எளிய ஆதரவற்ற முதியோர்களுக்கு பிரியாணி பொட்டலங்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முகாம் செயலாளர் அஜய், துணைச் செயலாளர் சக்திவேல், வீரமணி, ரஞ்சித், விபின், விஷால், சுரேஷ், பரத், சூர்யா, ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக நிகழ்ச்சி ஏற்பாட்டை ஒட்டன்சத்திரம் ஒன்றிய பொருளாளர் மக்கள் போராளி சு.வடிவேல் தலைமையில் சிறப்பாக செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் வி.சி.க.நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## அரசு மருத்துவக் கல்லூரிக்கு உடல் தானம் வழங்கிய குடும்பத்தினருக்கு
### ஆட்சியர் எம்.எஸ் பிரசாந்த் பாராட்டு

கள்ளக்குறிச்சி, ஆக.19

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவ கல்லூரி வளாகத்தில் மாணவ பேரவை உடற்கூறியல் துறை மற்றும் கல்லூரி நிர்வாக சார்பில் உடல் தானம் வழங்கிய குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்து பாராட்டு விழா நடைபெற்றன. இந்த விழாவிற்கு (கூடுதல் பொறுப்பு) முதல்வர். மருத்துவர் நேரு.தலைமை தாங்கினார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். பிரசாந்த் கலந்து கொண்டு

உடல் தானம் வழங்கிய குடும்பத்தினருக்கு பாராட்டு தெரிவித்து பாராட்டு சான்றிதழ் வழங்கி நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் இணை பேராசிரியர் டாக்டர். எலிசபெத் பிரியதர்ஷினி உடல் தானம் வழங்குவதில் உள்ள மகத்துவத்தைப் பற்றி சிறப்புரை ஆற்றினார். டாக்டர் ஆர் கே எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தாளாளர் டாக்டர் மகுடமுடி. மருத்துவக் கல்லூரி கண்காணிப்பாளர் ( பொ) டாக்டர் பொற்செல்வி. டாக்டர் பழமலை. கல்லூரி உள்ளிருப்பு மருத்துவர். (பொ) டாக்டர். சுகிர்தா. கல்லூரி துணை முதல்வர். ( பொ) ஹரி. மற்றும் இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள்.உதவி பேராசிரியர்கள். மருத்துவர்கள் நிர்வாக அலுவலர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். நிகழ்ச்சியை இயல் முறை மருத்துவர் (பிசியோதெரபி ) சு.சங்கர் தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சி முடிவில் உடற்கூறியல் துறை உதவி பேராசிரியர் மருத்துவர் வெற்றிவேல் நன்றி கூறினார்

## தலை இல்லாமல் கிடந்த பெண் சடலம்

ராஜபாளையம் ஆக.19

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அடுத்த நக்கநேரி கிராம விவசாய கிணற்றில் ஒரு பெண் சடலம் மாதப்பதாக கிடைத்த தகவலின்பேரில் சேத்தூர் ஊரக காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முருகராஜ் போலிசாருடன் சம்பவ இடத்திற்கு சென்று தீயனைப்பு துறையினர் உதவியுடன் மிவும் அழுகிய நிலையில் பச்சை கலர் புடவையுடன்.தலை இல்லாமல் கிடந்த சடலத்தை மீட்டு ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்

இதுகுறித்து வழக்கு பதிவு செய்த போலிசார் இறந்த பெண் யார்.மேலும் தலை என்ன ஆனது என்று தீவிரமாக விசாரணை செய்து வருகின்றனர்



கோவையில் சுதந்திர தினத்தை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டம் மணிகாரன்பாளையம் பகுதி 19 ஆவது வட்ட திமுக கிளை இளைஞர் தமிழ் மன்றம் நடத்தும் ஆறாம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் முப்பெரும் விழா 19 வட்டச் செயலாளர் பி குமார் தலைமையில் மணியக்காரன்பாளையம் பகுதி செயலாளர் அஞ்சுகம் பழனியப்பன் மாநகர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் துரை பிரவீன் குமார் முன்னிலை ஆறு குட்டி மணியக்காரன்பாளையம் பகுதி கழக நிர்வாகிகள் மகளிர் அணி ஆகியோர் இணைந்து மணியக்காரன்பாளையம் பகுதியில் பொதுமக்கள் சிறுவர் சிறுமியர் ஆகியோர் கலந்து கொள்ளும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி கொண்டாடினார் இறுதியாக மாநகர் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஜானகி சம்பத் நன்றி உரையாற்றினார்.

## ஆண்டிபட்டி வேளாண் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் சஜீவனா நேரில் ஆய்வு



ஆண்டிபட்டி,ஆக.19

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை வேளாண் பல்கலைக்கழக வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் ஆளில்லாதானியங்கிவிமானம் (ட்ரோன் )செயல்பாடுகளை தேனிமாவட்ட ஆட்சித்தலைவர் சஜீவனா நேரில் ஆய்வு செய்தார். இன்றைய நவீன யுகத்தில் விவசாய புரட்சியின் அடிப்படையில் பல்வேறு முன்னேற்றங்கள் வேளாண் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் வயல்வெளிகளில் ஆளில்லா தானியங்கி விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் முறையினை செயல் விளக்கத்துடன் மாவட்ட ஆட்சியர் சஜீவினா முன்பு ஆராய்ச்சி நிலையத்தினர் செய்து காண்பித்தனர்.

இது குறித்து ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் மதன் மோகன் கூறியதாவது,வயல்வெளிகளில் பயிர்களுக்கு ஏற்படும் பூச்சிகளை கட்டுப்படுத்த மனிதர்கள் மூலம் மருந்து தெளிக்கப்பட்டு வந்தது .இதனால் மனிதர்களுக்கு சுவாசப் பிரச்சனை ஏற்பட்டு, நோய் தொற்று அபாயம் இருந்தது .

இதனை கருத்தில் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் நவீன ஆளில்லா தானியங்கி விமானம் ( ட்ரோன்) தயார் செய்து பூச்சிகளுக்கு மருந்து தெளிக்கும் முறையினை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இந்த நிகழ்வின் போது கலெக்டரின் நேர்முக உதவியாளர் வளர்மதி ,வேளாண் இணை இயக்குனர் பால்ராஜ் மற்றும் வேளாண் அதிகாரிகள் சுதாகர், கீதா ராணி, கவிதா, பரமேஸ்வரி உள்பட பல விவசாயிகள் கலந்து கொண்டனர்.

விருதுநகரில் மூன்றாவது புத்தகத் திருவிழாவில்

## போட்டி தேர்வு மாணவருக்கான வினாடி வினா போட்டி மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் துவக்கி வைத்து பேசினார்





விருதுநகர். ஆக.19

விருதுநகர் மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில்,மூன்றாவது புத்தகத் திருவிழாவை முன்னிட்டு, தமிழ்நாட்டை சேர்ந்த போட்டித் தேர்வுக்கு தயாராகும்மாணவர்களுக்கான சிறப்பு வினாடி வினா போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் துவக்கி வைத்தார்.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து போட்டித்தேர்விற்கு தயாராகி கொண்டிருக்கும் கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் என சுமார் 234 குழுக்கள்கலந்துகொண்டனர். வினாடி வினா போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல்பரிசாக ரூ.1 இலட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும்.

இந்த வினாடி வினா நிகழ்ச்சியினை இணை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மரு.சங்கர சரவணன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) மரு.தண்டபாணி, மாவட்ட வழங்கல் அலுவலர் அனிதா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (தொழில்நெறிவழிகாட்டி) அ. பிரியதர்ஷினி, தமிழாசிரியர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்;டனர்.

## கோவையில் குற்ற விவாதிப்பு கூட்டத்தில் சிறப்பாக பணியாற்றியவருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கல்



கோவை, ஆக.19

கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீகூி.ரி.கார்த்திகேயன், தலைமையில் மாதாந்திர குற்ற விவாதிப்பு கூட்டம் மாவட்ட காவல் அலுவலகத்தில் உள்ள கலந்தாய்வு கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், காவல் ஆய்வாளர்கள், காவல் நிலைய பொறுப்பு அதிகாரிகள் மற்றும் மாவட்ட காவல் அலுவலகத்தில் இயங்கும் சிறப்பு பிரிவு காவல் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விவாதிப்பு கூட்டத்தில் கடந்த மாதத்தில் நடந்த திருட்டு, வழிப்பறி மற்றும் போதைப் பொருட்கள் விற்பனை போன்ற குற்ற செயல்களில் தொடர்புடைய எதிரிகளை திறம்பட செயல்பட்டு கைது செய்த மற்றும் நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தர சிறப்பாக பணியாற்றிய காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்களை பாராட்டி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்கள்1, தலைமை காவலர்கள் 02, முதல் நிலைக் காவலர்கள்02, காவலர்கள்03 என மொத்தம்08 நபர்களை பாராட்டி, பாராட்டு சான்றிதழ் வழங்கிசிறப்பித்தார்.

மேலும் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் அதிகாரிகள் மற்றும் காவல் துறையினருக்கு *போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபடுபவர்கள் மீதும் மற்றும் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீதும் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்என அறிவுரை வழங்கினார்.

மேலும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கோவை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் காவல் வாகனங்களை ஆய்வுசெய்தார்



கோவை மணியக்காரன்பாளையம் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் 17வது ஜ எம் ஜி கே தேசிய அளவிலான கராத்தே போட்டி நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கோயம்புத்தூர் மாவட்ட கராத்தே அசோசியேசன் தலைவர் விஎம்சிமனோகர் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார் உடன் தீரஜ் பவர் , டாக்டர் இளஞ்செழியன், முத்துராஜ் மற்றும் பலர் உள்ளனர்

## விடுமுறை நாளான நேற்று திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம்



திருச்செந்தூர், ஆக.19

முருகப்பெருமான் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாகவும், சிறந்த பரிகார ஸ்தலமாகவும் விளங்கி வரும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நாள் தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர். இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமிகோவிலுக்கு வந்து கடல் மற்றும் நாழி கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். விடுமுறை நாட்களில் ஏராளமான கூட்டம் அலைமோதுவது வழக்கம். அந்த வகையில் இன்று ஞாயிறு வழக்கத்தை விட சற்று கூட்டம் அதிகமாக காணப்பட்டது. அதனால் தரிசனம் செய்ய சுமார் 4 மணி நேரம் ஆகியது.

வழக்கம் போல் அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. 4.30 விஸ்வரூப தரிசனம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம் தொடர்ந்து மற்றகால பூஜைகள் நடந்தது.

பக்தர்கள் வந்த வாகனங்களை போக்குவரத்து போலிசார் திருச்செந்தூர் நாகர் கோவில் சாலை ஓரத்திலும், கோவில் அருகில் காவல் நிலையம் அருகே உள்ள தனியார் இடத்திலும் நிறுத்த ஏற்பாடு செய்திருந்தனர்.

## வயநாடு நிலச்சரிவுக்கு மார்ட்டின் குழுமம் நிதியுதவி



சென்னை, ஆக 19

கேரளமாநிலம் வயநாட்டில், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், மார்ட்டின் குழும நிர்வாக இயக்குனர் சார்லஸ் மார்ட்டின் 2 கோடி ரூபாய் வழங்கியுள்ளார்.

நிலச்சரிவுகளால் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ள வயநாடு மக்களுக்கு ஆறுதல் தெரிவித்துள்ள கோவை, மார்ட்டின் நிறுவனம், இந்த சவாலான நேரத்தில் அம்மக்களுக்கு உறுதுணையாக இருப்பதாக தெரிவித்துள்ளது.

வயநாட்டில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்கு 2 கோடி ரூபாய் வழங்கியுள்ள மார்ட்டின் நிறுவனம், அதில் ஒரு கோடி ரூபாயை, முதலமைச்சரின் பேரிடர் நிவாரண நிதிக்கும், மேலும் ஒரு கோடி ரூபாயை, இயற்கை பேரிடர்களின் போது நிவாரண பணிகளில் தீவிரமாக ஈடுபட்ட ரோட்டரி சங்கம் மூலம் நிவாரணப் பொருட்கள், மருத்துவ உதவி மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை வினியோகிக்கவும் வழங்கியுள்ளதாக மார்ட்டின் குழும நிர்வாக இயக்குநர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீவில்லி மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி கோவிலில் ஆவணி மாத வளர்பிறை பிரதோஷ விழா





ஸ்ரீவில்லி, ஆக.19

சைவ சமயத்தில் சிவபெருமானை வழிபட உகந்த காலமாக பிரதோஷ காலம் வழங்கப்படுகிறது. இந்த பிரதோஷ காலத்தில் நிகழும் வழிபாடு பிரதோஷ வழிபாடு என அழைக்கப்படுகிறது.

முன்பு ஒரு காலத்தில் சிவபெருமான் 3 உலகத்திற்கு ஏற்பட இருந்த பேரழிவை தடுத்து நிறுத்தி உலகத்தை காத்த வேளை பிரதோஷ வேளை என்பதால் சிவ பக்தர்கள் அந்த வேளையில் சிவாலயங்களுக்கு சென்று சிவனை வணங்கி அருள் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் தமிழகத்தில் புகழ்பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி திருக்கோவிலில் ஆவணி மாத வளர்பிறை பிரதோஷம் மற்றும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கடந்த ஜூன் 2ந் தேதி இந்த கோவிலில் குடமுழுக்கு பெருவிழா சிறப்பாக நடைபெற்ற பின்னர் நடைபெறும் முதல் வளர்பிறை பிரதோஷ விழா இது என்பதால் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வழக்கத்தை விட அதிகளவில் கலந்து கொண்டனர். வைத்தியநாத சுவாமி சிவகாமி அம்பாள் சந்நிதிக்கு எதிரே வீற்றிருக்கும் நந்தியம் பெருமானுக்கு பிரதோஷ வேளையில் பால் சந்தனம் பன்னீர் இளநீர் மஞ்சள் தயிர் போன்ற 16 வகையான வாசனை திரவியங்கள் கொண்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து நந்தியம் பெருமானுக்கும் மூலவர் வைத்தியநாத சுவாமி சிவகாமி அம்பாளுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டு உற்சவர்கள் வீதி உலாவும் சிறப்பாக நடைபெற்றது. பிரதோஷ பூஜைகளை கோவில் சிவாச்சாரியார் விக்னேஷ் பட்டர் ரமேஷ் பட்டர் தலைமையில் கோவில் சிவாச்சாரியார்கள் சிறப்பாக நடத்திவைத்தனர். பூஜைக்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் செள.சக்கரை அம்மாள் கோயில் செயல் அலுவலர் . செ. முத்து மணிகண்டன் மற்றும் கோவில் அலுவலர்களும் திருக்கோவில் பணியாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை இடைவிடாமல் சென்று நந்தியம் பெருமானை தரிசித்து பிரதோஷ விழாவில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

## பாலமேட்டில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் ஆடிப்பூர பெருவிழா: திரளான பெண்கள் பங்கேற்பு



அலங்காநல்லூர், ஆக.19

மதுரை மாவட்டம் பாலமேடு ஸ்ரீ மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் சக்தி பீடத்தில் ஆடிப்பூர பெருவிழா நடைபெற்றது. ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை 4.00 மணியளவில் சக்தி கொடியேற்றி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது அதனை தொடர்ந்து உலக நன்மை வேண்டியும் விவசாயம் செழிக்கவும் சக்தி பக்தர்கள் குடும்பத்திற்காகவும்

கலச விளக்கு வேள்வி பூஜை நடைபெற்றது கஞ்சி கலயத்துடன் பக்தர்கள், கோவிலிலிருந்து புறப்பாடாகி பஸ் நிலையம் வழியாக விளக்குத்தூண் மற்றும் பெரிய கடைவீதியாக சென்று கோவில் திரும்பினார். கோவில் வாசலில் நின்றிருந்த சக்தி பெண்கள் கலசத்துடன் வருகை தந்த பக்தர்களுக்கு ஆராத்திஎடுத்து பூஜைகள் செய்து வரவேற்றனர்.

தொடர்ந்து பல வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு அம்மன் பக்தர்களுக்கு காட்சியளித்தார் இதில் 500க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். விழா ஏற்பாடுகளை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் சக்திபீட விழா குழுவினர் செய்திருந்தனர்.

## தேனி அல்லிநகரம் நகராட்சியில் ரூ.10கோடி குடிநீர் கட்டணம் நிலுவை

### பணம் கட்டாவிட்டால் இணைப்பு துண்டிப்பு

தேனி, ஆக.19

தேனி அல்லிநகரம் நகராட்சி பகுதியில் வீடுகளில் குடிநீர் இணைப்பு பெற்ற மக்கள் பலரும் குடிநீர் கட்டணம் செலுத்தாமல் நிலுவையில் வைத்துள்ளனர்

இதனால் நகராட்சிக்கு வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதோடு குடிநீர் திட்டத்துக்கான மின்சார கட்டணத்தை செலுத்துவதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து நகராட்சி ஆணையாளர் ஏகராஜன் தெரிவித்த பொழுது அல்லிநகரம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி குடிநீர் கட்டணம் தொழில்வரி பாதாள சாக்கடை. கடை வாடகை குத்தகை கட்டணம் ஆகிய இனங்களில் 2024-25 ஆண்டிற்கு நிலுவை மிகவும் அதிகமாக உள்ளது நகராட்சியில் குடிநீர் கட்டணம் மட்டும் சுமார் ரூபாய் 10 கோடி வரை மக்கள் செலுத்தாமல் நிலுவையில் உள்ளது இதனால் மின்சார கட்டணம் கூட செலுத்த முடியாத நிலை உள்ளது இதே நிலை நீடித்தால் பொதுமக்களின் அத்தியாவசியமான குடிநீர் வினியோகம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதில் தடை ஏற்படும் சூழ்நிலை உள்ளது

பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் விநியோகம் தெருவிளக்கு சுகாதாரப் பணிகள் சாலை வசதிகள் உள்ளிட்ட பணிகளை செய்து கொடுக்கும் பொருட்டு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி குடிநீர் கட்டணம் கடை வாடகை உள்ள வரி இனங்களை வருகிற 31ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும் நீண்ட காலமாக சொத்து வரி குடிநீர் கட்டணம் செலுத்தாமல் இருக்கும் நபர்களின் வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகளை துண்டிக்கும் நடவடிக்கை அதிரடியாக மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்

### மருத்துவர்கள் மீதான வன்முறைக்கு எதிராக

## IMA-Tambaram வுடன் பார்வதி மருத்துவமனை ஆர்ப்பாட்டம்



சென்னை, ஆக.19

பார்வதி மருத்துவமனை, இந்திய மருத்துவ சங்கம் (IMA-Tambaram) உடன் இணைந்து, மருத்துவர்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்து வருவதைக் கண்டித்து குரோம்பேட்டை ஜி எஸ் டி சாலையில் நேற்று ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

இந்திய மருத்துவ சங்கம் ஆகஸ்ட் 17 அன்று 24 மணி நேரமும் அவசர மற்றும் OPD சேவைகளை நாடு முழுவதும் திரும்பப் பெற அழைப்பு விடுத்துள்ளது. பாதிக்கப்பட்டவருக்கு நீதி மற்றும் மருத்துவர்களைப் பாதுகாக்க ஒரு சட்டத்தையும் அந்த அமைப்பு கோரியது. அழைப்பைத் தொடர்ந்து, பொது மற்றும் தனியார் சுகாதார வசதிகளைச் சேர்ந்த மருத்துவர்கள் நாடு முழுவதும் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் 200க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் மூத்த மிவிகி உறுப்பினர்கள் பங்கேற்று, பாதுகாப்பான பணிச்சூழல் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கான மரியாதைக்காக அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்தனர். பார்வதி மருத்துவமனையின் நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர். எஸ். முத்துக்குமார், மிவிகி குழுவுடன் இணைந்து, நிலைமையின் அவசரத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் சக்திவாய்ந்த செய்தியுடன் நிகழ்வை வழிநடத்தினார்.

## சைக்ளத்தான் விழிப்புணர்வு நிகழ்வு



சென்னை, ஆக. 19

பெண்கள் பாதுகாப்பு என்பது நாடெங்கும் பேசப்படும் விவாதப்பொருளாக இருக்கின்ற நிலையில், அதன் மீது விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்தோடு சைக்ளத்தான் நிகழ்வுகளை ரேலா மருத்துவமனை சென்னை சைக்ளிஸ்ட்ஸ் அமைப்புடன் இணைந்து நடத்தியிருக்கிறது. இந்த "விடுதலை 40" சைக்ளத்தான் நிகழ்வுகளில் இம்மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏறக்குறைய 500 மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்துகொண்டனர்.

ரேலா மருத்துவமனையின் தலைமை செயல் அலுவலர் டாக்டர். இளங்குமரன் கலியமூர்த்தி, கௌரவ விருந்தினர் டாக்டர். எம்.ஆர். சௌந்தரராஜன், சர்வதேச சைக்ளிஸ்ட், சிறப்பு விருந்தினர்கள் பத்மினி ஜானகி, தலைமை செயல் அலுவலர் - இணை நிறுவனர், "மைண்ட் அண்ட் மாம்" மற்றும் ரேலா மருத்துவமனை இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி பிரிவின் தலைவர் டாக்டர் தீபஸ்ரீ ஆகியோர் கொடியசைத்து சைக்ளத்தான் நிகழ்வுகளை தொடங்கி வைத்தார்.

## ராஜபாளையம் பெண்கள் நூலகத்தில் படிப்போர் வட்டக்கருத்தரங்கம்



ராஜபாளையம் ஆக.19

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் விடுதலை நாள் விழாவை முன்னிட்டு படிப்போர் வட்டம் நிகழ்வு நடந்தது. உலகத் தமிழ்க் கழகத்தின் தலைவர் இல.நிலவழகன் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் அக்கினிச் சிறகுகள் பொறுப்பாளர் திருவாட்டி சக்தி மகேசுவரி அவர்கள் வரவேற்றுப் பேசினார். திருவில்லிப்புத்தூர் செல்வன் அடைக்கலம் பாரதியார் பற்றி பாடல் ஒன்று பாடினார்.

வாசகர் வட்டத்தலைவி திருவாட்டி மஞ்சு ரெங்கநாதன் அவர்கள், தமிழாசிரியர் திரு மாடசாமி , திருவாட்டி காயத்ரி ஆகியோர் முன்னிலை உரைப்பேசினர். வழக்கறிஞரும் பத்திர எழுத்தருமான விருதுநகர் திருவாட்டி தேவிபாலா அவர்கள் எழுதிய குறும்பா டல் நூல்களான அதிகனே என்ற நூலைப் பற்றி புனல் வேலி ஔவைத் தமிழ் மன்றத்தின் தலைவர் தமிழ்ப் பித்தன் அவர்களும், அகப்பேழை என்ற நூலைப் பற்றி திருவாட்டி சக்தி மகேசுவரி அவர்களும், குறும்பா என்ற நூலைப் பற்றி திருவாட்டி பத்மாகுரு அவர்களும் ஆய்வு செய்து எடுத்துப் பேசினார்கள். பாடலாசிரியர் திருவாட்டி தேவிபாலா குணசேகரன் அவர்கள் ஏற்புரை நல்கினர். சிறப்பாகச் செயல்பட்டு வருவதால் நூலகர் திருவாட்டி இரா.முத்துலட்சுமி அவர்கள் பாராட்டுப் பெற்றார். நிறைவாக நூலகர் நன்றி நன்றி கூற நிகழ்வு சிறப்பாக நிறைவுற்றது.

## சிவகாசி என்.ஆர்.கே.ஆர்.ரோடு வேகத் தடை அமைக்க கோரிக்கை

சிவகாசி, ஆக.19

சிவகாசி என்.ஆர்.கே.ஆர்.ரோடு, புது ரோடு, சாத்தூர் ரோடு, தட்டுமேட்டுத் தெரு ஆகிய நான்கு ரோடுகளும் சந்திக்கும் பகுதியில் இரு சக்கர வாகனங்கள் மோதல் அடிக்கடி நடந்து வருகிறது. இந்தப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை வளாகத்தில் இருந்து ரோட்டுக்கு வரும் பொது மக்கள் மீதும் வாகனங்கள் மோதி விபத்து ஏற்படுகிறது. மேலும் இப் பகுதியில் உள்ள பள்ளிக் கூட மாணவ மாணவிகளும் விபத்தில் சிக்கி காயமடைந்தனர். இதைத் தடுக்க மருத்துவமனை வளாகத்துக்கு செல்லும் பகுதியில் வேகத்தடை அமைக்க வேண்டும்.

### தென் தமிழகத்தில் முதன் முறையாக

## மதுரை அப்போலோ மருத்துவமனையில் பிரெஸ்ட் கிளினிக் மார்பக நல சிகிச்சை மையத்தை துவக்கியது

### மாவட்ட ஆட்சியர் சங்கீதா குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்தார்



மதுரை, ஆக.19

மதுரை அப்போலோ சிறப்பு மருத்துவமனை, தென் தமிழகத்திலேயே முதன் முறையாக பெண்களுக்கு விரிவான மார்பக நல சிகிச்சையை வழங்குவதற்காக பிரத்யேகமாக அப்போலோ பிரெஸ்ட் கிளினிக்கை துவங்கி இருக்கிறது. இந்த கிளினிக்கின் மூலம் பெண்களின் மார்பகம் குறித்த ஆரோக்கியத்தையும் மற்றும் அதன் பிரச்சனைகளையும் கண்டறிந்து அதற்கேற்ப சிகிச்சை பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா அப்போலோ பிரெஸ்ட் கிளினிக்கை குத்துவிளக்கேற்றி துவக்கிவைத்தார். அவருடன் மதுரை மண்டல முதன்மைக் கல்வி அதிகாரி கார்த்திகா, மகாத்மா கல்வி குழுமத்தின் தலைவர் பிரேமலதா, மகளிர் தொழில்முனைவோர் (WE) அமைப்பின் தலைவர் ராஜகுமாரி ஜீவகன், லேடி டோக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பியூலா ஜெயஸ்ரீ மற்றும் சீதாலட்சுமி கல்வி குழுமத்தின் தாளாளர் பூர்ணிமா வெங்கடேஷ் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அப்போலோ மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி நீலகண்ணன், அவர்கள் அப்போலோ மருத்துவமனை தென்தமிழக மக்களின் மருத்துவ நலனை மேம்படுத்துவதில் எங்களுக்கு உள்ள அர்ப்பணிப்பு உணர்வின் வெளிப்பாடாக, தற்போது அப்போலோ பிரெஸ்ட் கிளினிக் துவங்கப்பட்டுள்ளது. பெண்களின் மார்பகம் சார்ந்த அனைத்து பிரச்சனைகளுக்கும் ஆலோசனைகள், நோய் கண்டறிதல் பரிசோதனைகள், அறுவை சிகிச்சை என பல்முனை மருத்துவ வசதிகளும் இந்த கிளினிக்கில் வழங்கப்படும் என்றார்.

புற்றுநோய் அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர் கே.பாலு மகேந்திரா பேசுகையில், தென்தமிழகத்தில் மார்பக பிரச்சனைகளால் அவதிப்பட்டு வரும் பெண்களுக்கு நம்பிக்கையையும், மருத்துவ வசதியையும் அளிக்கக் கூடிய வகையில், ஒரு மிக முக்கியமான முன்னெடுப்பாக அப்போலோ பிரெஸ்ட் கிளினிக் உருவாகி உள்ளது.

கிளினிக்கின் விரிவான மருத்துவ அணுகுமுறையின் மூலம் பெண்களை அச்சுறுத்தும் மார்பக புற்றுநோயை ஆரம்பக்கட்டத்திலேயே துல்லியமாக கண்டறிந்து அவர்களுக்கான மருத்துவ சிகிச்சையை கொடுப்பதில் இந்த அப்போலோ பிரெஸ்ட் கிளினிக் ஒரு சிறந்த தீர்வாக இருக்கும்.

பெண்கள் முதல் முறையாக கிளினிக் வரும்போதே பரிசோதனைகள் செய்யப்பட்டு, நோயின் தன்மையை கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படும். மார்பக புற்றுநோய் அறுவை சிகிச்சைக்கான சிகிச்சைகளில் பிரெஸ்ட் கன்சேர்விங் அறுவை சிகிச்சை, கீமோதெரபி, டார்கெட்டெட் தெரபி, மேம்பட்ட கதிர்வீச்சு சிகிச்சை மற்றும் பல புதுமையான சிகிச்சைகள் சிகிச்சை பெறுபவரின் தேவைகளுக்கு ஏற்ப வழங்கப்படும்."

இந்நிகழ்ச்சியில் புற்றுநோய் சிகிச்சை மருத்துவநிபுணர்கள், மருத்துவசேவைகளின் இணை இயக்குனர் டாக்டர் கே.பிரவீன் ராஜன், மார்கெட்டிங் பொது மேலாளர் மணிகண்டன் மற்றும் நிர்வாக பொது மேலாளர் கற்பகவல்லி, ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கலசலிங்கம் பல்கலை, பேக்கன் சொலூசன், மற்றும் ஸ்பிரின்ட் 6 கம்பெனிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஸ்ரீவில்லி, ஆக.19

ஸ்ரீவில்லி கலசலிங்கம் பல்கலைக்கழகம், ஐஆர், ஆர்-டி, இசிஇ ஆகிய துறைகள் சேர்ந்து , கோயம்புத்தூர், பேக்கன் பேக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஸ்பிரிண்ட்6 ஸ்பெஷலைஸ்டு சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்., ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் வேந்தர் முனைவர் கே.ஸ்ரீதரன், தலைமையில் நடைபெற்றது.

இணைவேந்தர் டாக்டர் எஸ்.அறிவழகிஸ்ரீதரன் துணைத் தலைவர்கள் முனைவர் எஸ்.சசி ஆனந்த், முனைவர் எஸ்.அர்ஜுன் கலசலிங்கம், துணைவேந்தர் முனைவர் எஸ்.நாராயணன், பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இயக்குனர் எம்.பள்ளி கொண்ட ராஜசேகரன் வரவேற்றார். பேக்கன் பேக் கம்பெனி இயக்குநர் கிருஷ்ணாசந்தர், மற்றும் ஸ்பிரிண்ட் 6 கம்பெனி இயக்குனர். கே.காளி யப்பன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர், மேலும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொழில்துறை சவால்கள் குறித்த கூட்டு ஆராய்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றனர். பல்கலையின் சார்பில் துணைவேந்தர் கையெழுத்திட்டார்.

டீன், பி.சிவக்குமார், துறையின் ஆராய்ச்சி முன்னேற்றம் மற்றும் வசதிகள் குறித்துவிவரித்தார். இயக்குனர் எஸ்.சுப்ரகாஷ், தொழில திபர்களை கவுரவித்தார். பேராசிரியர்கள் ஆர்.கோட்டை மலை மற்றும் .பி.பிரதீப் ராஜா நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்தார். எம்.முரளி நன்றி கூறினார்.

## சனி பிரதோஷத்தை முன்னிட்டு ராஜபாளையம் சொக்கநாதன் புதூர் சிவன் கோவிலில் சிறப்பு வழிபாடு



ராஜபாளையம் ஆக.19–

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே சொக்கநாதன் புத்தூர் கிராமத்தில் அருள்மிகு தவநந்தி கண்டேஸ்வரர் திருக்கோவில் அமைந்துள்ளது. நந்தீஸ்வரர் வடக்கு நோக்கி தவநிலையில் அலங்கார நந்தியாக வீற்றிருப்பது இக்கோவிலின் தனிச் சிறப்பாகும். குழந்தை வரம் வேண்டுபவர்கள் இக்கோவிலிற்கு பிரதோஷத்து வழிபாடு அன்று வருகை தந்து பிரசாதம் சாப்பிட்டு சென்றால் குழந்தை வரும் உண்டாகும் என்பது ஐதீகம்.

இக் கோவிலில் சனி பிரதோஷம் சிறப்பாக நடைபெற்றது. அலங்கார நந்தீஸ்வரருக்கு மஞ்சள், பால், வாசனை திரவியம், தேன், இளநீர், தயிர் போன்ற பல்வேறு பொருட்களால் அபிஷேகம் செய்து சிறப்பு அலங்காரம் செய்விக்கப்பட்டது. கோவில் அறங்காவலர் குழு செயலாளர் நீராவி முன்னிலையில் நடைபெற்ற இந்த பூஜையில் ஏராளமானோர் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர். பூஜை முடிவில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. 500க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்.

## விருதுநகர் மாவட்ட கபடி நடுவர்களுக்கான பயிற்சி பட்டறை நடத்த தீர்மானம் நிறைவேற்றம்

ராஜபாளையம், ஆக.19

விருதுநகர் மாவட்ட கபடி கழக செயற்குழு கூட்டம் ஜமீன் கொல்லங்கொண்டான் மணத்தி கணேசன் கபடி விளையாட்டு அகாடமியில் வைத்து மூத்த துணை தலைவர் ஏ.பி.எஸ். ராஜா தலைமையில் நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட செயலாளர் டி.கனி முத்து குமரன், துணைத்தலைவர் பி. விவேகானந்தன், தொகுதி பொறுப்பாளர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட கபடி கழக நடுவர்கள் போர்டு சேர்மனாக சாத்தூர் டி சாமுவேல், கன்வீனராக புத்தூர் எஸ்.ஆறுமுகசாமி, இணை கன்வீனராக கொம்மந்தபுரம் பி. செல்வம், செயற்குழு உறுப்பினர்களாக சாத்தூர் சக்கரபாணி, காரியாபட்டி எஸ். பிச்சை, கிருஷ்ணாபுரம் ஆர், கரிகாலன், சாத்தூர் கே.பாண்டியராஜ், தளவாய்புரம் கர்ண ராஜ், ஆலோசர்களாக மூத்த நடுவர்கள் எஸ். எஸ் காளிதாஸ், செந்தில்குமார் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். விருதுநகர் மாவட்ட கபடி நடுவர்களுக்கான பயிற்சி பட்டறை ராஜபாளையத்தில். விரைவில் நடத்த தீர்மானிக்கப்பட்டது. மற்றும் கீழ் இளையோர், இளையோர், கபடி வீரர், வீராங்கனைகள் தேர்வு போட்டிகளை விரைவில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. முடிவில் இணைச் செயலாளர் எஸ்.ஆர். சுரேஷ் நன்றி கூறினார்.

## நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயம் வெளியீட்டு விழா

# கருணாநிதி மிகச்சிறந்த ஆளுமை, இந்தியாவின் வளர்ச்சியில் முத்திரை: பிரதமர் மோடி புகழாரம்

சென்னை, ஆக.19–

கருணாநிதியின் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணய வெளியீட்டு விழாவிற்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று மாலை நடைபெறும் விழாவில், கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் வெளியிட்டார்.

இது குறித்து முதல்வர் ஸ்டாலினுக்கு பிரதமர் மோடி வாழ்த்து செய்தி அனுப்பி உள்ளார்.

கலைஞரின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா நடைபெறவிருப்பது அறிந்து தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும், இவ்விழா இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற தலைவர்களில் ஒருவரான கலைஞருக்காக நடைபெறும் முக்கியமான விழாவாகும் என்றும் தெரிவித்துள்ள பிரதமர், இந்திய அரசியல், இலக்கியம் மற்றும் சமூகப் பணிகள் ஆகிய பல்வேறு களங்களில் உயர்ந்து விளங்கிய தலைவராக திகழ்ந்த கலைஞர், தமிழ்நாட்டின் வளர்ச்சியிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் எப்போதும் அக்கறை கொண்டவராக விளங்கினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



### பிரதமர் மோடிக்கு ஸ்டாலின் நன்றி

கருணாநிதி 100 ரூபாய் நாணய வெளியீட்டு விழாவிற்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில், "பிரதமர் நரேந்திர மோடிக்கு முழு மனதுடன் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 'முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா மாபெரும் வெற்றியடைய அன்பான வாழ்த்துகளும், ஆதரவும் வழங்கிய பிரதமர் மோடிக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என பதிவிட்டுள்ளார்.

### அழிக்க முடியாத அடையாளம்

ஒரு சிறந்த அரசியல் தலைவராக திகழ்ந்த கலைஞர், மக்களால் பலமுறை முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பதவியிலிருந்து சமூக வளர்ச்சி மற்றும் அரசியல் குறித்த அவரது ஆழமான புரிதலை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில் நமது நாட்டின் வரலாற்றில் அழிக்க முடியாத அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.



பன்முகத் திறமை கொண்ட கலைஞர், தனது எழுத்துக்களின் மூலம் தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் இன்றும் மக்களால் நினைவுகூரப்படுகின்றன என்றும், அவரது இலக்கிய ஆற்றல், அவரது படைப்புகளின் மூலம் பிரகாசித்தது மட்டுமல்லாமல், அவருக்கு 'கலைஞர்' என்ற அன்பான பட்டத்தையும் பெற்றுத் தந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நினைவு நாணயம் வெளியிடப்படுவதன் மூலம், கலைஞரின் நினைவு போற்றப்படுகிறது என்றும், இந்த நினைவு நாணயம் கலைஞர் பின்பற்றிய கொள்கைகள், மரபுகள் மற்றும் அவரது பணிகளை என்றென்றும் நினைவூட்டுவதாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

### தொலைநோக்கு பார்வை

மேலும், இந்த முக்கியமான தருணத்தில் கலைஞருக்கு தனது நெஞ்சார்ந்த அஞ்சலியைச் செலுத்த விரும்புவதாகும் குறிப்பிட்டுள்ள பிரதமர், 2047ம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதை நோக்கி நாம் நம்பிக்கையுடன் நடைபோடும் இந்த வேளையில், கலைஞர் போன்ற தலைவர்களின் தொலைநோக்குப் பார்வையும், சிந்தனைகளும், நம் தேசத்தின் பயணத்தைத் தொடர்ந்து வடிவமைக்கும் என்றும், கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா மாபெரும் வெற்றியடைய தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

# 15 ஆயிரம் அடி உயரத்தில் உலகின் முதல் மருத்துவமனை; நிறுவியது இந்திய ராணுவம்!





புதுடெல்லி, ஆக.19–

இந்திய ராணுவமும், விமானப்படையும் இணைந்து பாராசூட் மூலம் லடாக்கில் 15 ஆயிரம் அடி உயரத்தில் தற்காலிக மருத்துவமனையை (ரெடிமேட் போர்ட்டபிள்) ஏற்படுத்தியுள்ளன. இது ஒரு மைல்கல் சாதனை என மத்திய பாதுகாப்பு அமைச்சகம் பாராட்டியுள்ளது.

போர் அல்லது பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தற்காலிக மருத்துவமனையை அமைக்கும் பணியில் இந்திய ராணுவம் ஈடுபட்டு வருகிறது. ராணுவம் நிலை கொண்டுள்ள சியாச்சின், லடாக் பகுதிகளில் இத்தகைய தற்காலிக மருத்துவமனைகளுக்கு தேவை அதிகம்.

ஏனெனில் அங்கு பணியில் இருக்கும் வீரர்களுக்கு அத்தியாவசிய மருத்துவ உதவிகள் உடனுக்குடன் கிடைப்பதில் சிரமங்கள் உள்ளன. இதை கருத்தில் கொண்டு, 'போர்ட்டபிள்' என்ற வகையில், ரெடிமேடு ஆக செய்யப்பட்ட மருத்துவமனைகளை அங்கு கொண்டு சென்று விமானத்தில் இறக்கியுள்ளது ராணுவம்.

சி130 ஹெர்குலிஸ் எனப்படும் ராணுவ போக்குவரத்து விமானத்தில் கொண்டு செல்லப்பட்ட இந்த போர்ட்டபிள் மருத்துவமனை, லடாக்கில் 15 ஆயிரம் அடி உயரத்தில் குறிப்பிட்ட இடத்தில் கச்சிதமாக பாராசூட் மூலம் இறக்கப்பட்டது. இது ஒரு மைல்கல் சாதனை என மத்திய பாதுகாப்பு அமைச்சகம் பாராட்டியுள்ளது.

15 ஆயிரம் அடி உயரத்தில் மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது, உலகில் இதுவே முதல் முறை. ராணுவத்தினர் மருத்துவமனையை அமைக்கும் வீடியோ சமூகவலைதளத்தில் வைரலாகிவருகிறது. இந்த மருத்துவமனையில், உயிர் காக்க தேவையான அனைத்து நவீன மருத்துவ சிகிச்சைகளையும் அளிக்க முடியும் என்கின்றனர், ராணுவ அதிகாரிகள். மலையாக இருந்தாலும் காடாக இருந்தாலும் எங்கும் எடுத்துச்செல்லும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள ஆரோக்கிய மைத்ரி ஹெல்த் கியூப் எனப்படும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த போர்ட்டபிள் மருத்துவமனை உலகின் முதல் போர்ட்டபிள் மருத்துவமனையாக உள்ளது.

## இட ஒதுக்கீடு பறிப்பு: ராகுல் புகார்

புதுடெல்லி, ஆக.19–

''மத்திய அரசு பணிகளில் 'லேட்டரல் என்ட்ரி' மூலம் ஆட்களை நியமித்து ஓபிசி மற்றும் தாழ்த்தப்பட்டவர்களின் இட ஒதுக்கீடு வெளிப்படையாக பறிக்கப்படுகிறது'' என எதிர்க்கட்சி தலைவர் ராகுல் குற்றம்சாட்டி உள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் சமூக வலைதளத்தில் ராகுல் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது: யுபிஎஸ்சி.,க்கு பதிலாக ஆர்எஸ்எஸ் மூலம் அரசு பணியில் ஊழியர்களை அமர்த்தி அரசியல் சாசனம் மீது பிரதமர் மோடி தாக்குதல் நடத்துகிறார். மத்திய அரசின் பல்வேறு அமைச்சகங்களில் உள்ள முக்கியப் பணியிடங்களை 'லேட்டரல் என்ட்ரி' மூலம் ஆட்களை தேர்வு செய்வதன் மூலம் எஸ்சி, எஸ்டி மற்றும் ஓபிசி பிரிவினரின் இட ஒதுக்கீடு வெளிப்படையாகப் பறிக்கப்படுகிறது. நாட்டின் உயர்மட்ட அதிகாரம் உட்பட அனைத்து உயர் பதவிகளிலும் தாழ்த்தப்பட்டவர்கள் பிரதிநிதித்துவம் பெறவில்லை. இதை சரி செய்வதற்கு பதில், 'லேட்டரல் என்ட்ரி' மூலம் அவர்கள், உயர் பதவியில் இருந்து மேலும் அகற்றப்படுகிறார்கள் என கூறி வருகிறேன். இது யுபிஎஸ்சி தேர்வுக்கு தயாராகும் தேர்வர்கள் மீதான தாக்குதல். தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு உள்ளிட்ட சமூக நீதி மீதான தாக்குதல். சில கார்பரேட் நிறுவனங்களை சேர்ந்தவர்கள் முக்கிய அரசு பதவிகளை ஆக்கிரமித்தால் என்ன ஆகும் என்பதற்கு சிறந்த உதாரணம் செபி. இதில் தான் தனியார் துறையை சேர்ந்த ஒருவர் முதல்முறையாக தலைவராக்கப்பட்டார். நிர்வாக கட்டமைப்பு மற்றும் சமூக நீதியை பாதிக்கும் எந்த வித தேச விரோத நடவடிக்கைகளையும் 'இண்டியா' கூட்டணி எதிர்க்கும். 'ஐஏஎஸ் பதவியை தனியார்மயமாக்குவது' என்பது இட ஒதுக்கீட்டை நிறுத்துவதற்கான மோடியின் உத்தரவாதம். என்றார் அவர்.





தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி அணையில் இருந்து விவசாய நிலங்கள் பாசம் பெறும் வகையில் தண்ணீரை திறந்து வைத்தார். உடன் மாவட்ட கலெக்டர் தா.கிறிஸ்துராஜ், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், நீர்வளத்துறை தலைமை பொறியாளர் முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

## தென்காசி மாவட்ட நிர்வாகம் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம்

# குற்றாலம் சாரல் விழாவில் பளு தூக்குதல் - ஆணழகன் போட்டி

### கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்



தென்காசி, ஆக.19–

தென்காசி மாவட்ட நிர்வாகம் சார்பாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் குற்றால சாரல் விழாவில் நேற்று (18ந் தேதி) கலைவாணர் கலையரங்கத்தில் நடைபெற்ற வலு தூக்குதல், பளு தூக்குதல் மற்றும் ஆணழகன் போட்டியினை மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல் கிஷோர் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்து சிறப்பித்தார்கள்.

வலு தூக்குதல் போட்டி பிரிவில் நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டத்தினைச் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டார்கள். பளு தூக்குதல் போட்டி பிரிவில் நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டத்தினைச் சார்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள்.

ஆணழகன் போட்டி பிரிவில் நெல்லை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் தென்காசி ஆகிய மாவட்டத்தினை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டனர்.

வலு தூக்கும் போட்டி 59 கிலோ எடை பிரிவில் கண்ணன் முதலிடமும், சிவசங்கர் இரண்டாமிடமும், கார்த்திகேயன் மூன்றாமிடமும், 66 கிலோ எடை பிரிவில் மயில் ராஜா முதலிடமும், சங்கர் இரண்டாமிடமும், சண்முக ராஜா மூன்றாமிடமும், 74 கிலோ எடை பிரிவில் மகாராஜா முதலிடமும், ஹரிகரன் இரண்டாமிடமும், ராமகிருஷ்ணன் மூன்றாமிடமும், 83 கிலோ எடைபிரிவில் பால சுப்பிரமணியன் முதலிடமும், அகஸ்டின் பிரைசன் இரண்டாமிடமும், குணசேகரன் மூன்றாமிடமும், 93 கிலோ எடை பிரிவில் பூதத்தான் முதலிடமும், காஸ்பல்ரீகன் இரண்டாமிடமும், சிவகுமார் மூன்றாமிடமும், 105 கிலோ எடை பிரிவில் பிரேம் குமார் முதலிடமும், சுரேஷ்குமார் இரண்டாமிடமும், ஆகாஷ் மூன்றாமிடமும், 120 கிலோ எடை பிரிவில் ஹுரா அப்துல் ரசாக் முதலிடமும், சுரேஷ்குமார் இரண்டாமிடமும், தினேஷ் சாலமோன் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர்.

ஆணழகன் போட்டியில் 50 கிலோ எடை பிரிவில் பாஸ்கர் முதலிடமும், மணி ஹரிஷ் இரண்டாமிடமும், காஜா மைதீன் மூன்றாமிடமும், 55 கிலோ எடை பிரிவில் ஆதிஷ் முதலிடமும், முத்து கிருஷ்ணன் இரண்டாமிடமும், ஆறுமுகம் மூன்றாமிடமும், 60 கிலோ எடை பிரிவில் முத்துகிருஷ்ணன் முதலிடமும், இசக்கி ராஜா இரண்டாமிடமும், முனீஸ்வரன் மூன்றாம் இடமும், 65 கிலோ எடை பிரிவில் பிரதீப்குமார் முதலிடமும், கதிர்வேல் இரண்டாமிடமும், யுவசக்தி மூன்றாமிடமும், 70 கிலோ எடை பிரிவில் ஹானிப் முதலிடமும், சபரிகாந்த் இரண்டாமிடமும், அமீன் தார்க் மூன்றாமிடமும், 75 கிலோவிற்கு மேல் உள்ள எடை பிரிவில் முருகானந்தம் முதலிடமும், அருண் செல்வம் இரண்டாமிடமும், அருண் பாண்டியன் மூன்றாமிடமும் பெற்றனர்.

பளு தூக்கும் விளையாட்டு போட்டி ஆண்களுக்கான 61கிலோ எடை பிரிவில் மனோ ரஞ்சன் முதலிடமும், சுந்தர் இரண்டாமிடமும், டெல்பின் கிஷோர் மூன்றாமிடமும், 67 கிலோ எடை பிரிவில் விபின் ராஜ் முதலிடமும், சேகர் இரண்டாமிடமும், முகம்மது ஈஷா மூன்றாமிடமும், 73 கிலோ எடை பிரிவில் பேராட்சி முதலிடமும், சிவ சுடர் இரண்டாமிடமும், இசக்கி ராஜா மூன்றாமிடமும், 81 கிலோ எடை பிரிவில் நாகா அர்ஜுன் சிங் முதலிடமும், ஸ்ரீ கோபால கவின் இரண்டாமிடமும், ஏசு ராஜா மூன்றாமிடமும், 81 கிலோ எடைக்கு மேல் உள்ள பிரிவில் வெற்றிவேல்ராம்சிங் முதலிடமும், ஜஸ்டின் ஜியோ இரண்டாமிடமும், பிளாசியஸ் ராய் மூன்றாமிடமும் பெற்றனர்.

பளு தூக்கும் விளையாட்டு போட்டி பெண்களுக்கான பிரிவில் 55கி எடை பிரிவில் செ.சந்தியா முதலிடமும், க.மகா இரண்டாமிடமும், மு. சரவண ஜோதி மூன்றாமிடமும், 59 கிலோ எடை பிரிவில் மு.சுபா முதலிடமும், ரா.சுடர் வள்ளி இரண்டாமிடமும், ரா.போதனாள் ஸ்ரீ மூன்றாமிடமும், 64 கிலோ எடை பிரிவில் ச. தேன் மாலதி முதலிடமும், அ. ரெஜ்மிலா இரண்டாமிடமும், ம.வர்ஷா மூன்றாமிடமும், 71 கிலோ எடை பிரிவில் மு.மகாலெட்சுமி முதலிடமும், தே.அனுசுயா பேபி இரண்டாமிடமும், ரா. பேட்சி கலைவாணி மூன்றாமிடமும், 71 கிலோவிற்கு மேல் எடை பிரிவில் க. சந்தியா முதலிடமும், மா.கார்த்திகா இரண்டாமிடமும், கு. கீர்த்திகா மூன்றாமிடமும் பெற்றுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மதி இந்திரா பிரியதர்ஷினி, தென்காசி வருவாய் கோட்டாட்சியர் லாவண்யா, மாவட்ட சமூக நலன் அலுவலர் மதிவதனா, குற்றலாம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் சுஷ்மா, குற்றாலம் பேரூராட்சி சுகாதார அலுவலர் ராஜகணபதி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ரா.ராமசுப்பிரமணியன், மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் ந.ஆ.ஜெயரத்தினராஜன், விளையாட்டு சங்க உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி தமிழ்நாடு ஓட்டல் விடுதிகள் மற்றும் உணவகங்களின் செயல்பாடுகள் மற்றும் கட்டிடங்கள் சீரமைப்பு பணிகள் மேற்கொள்வது குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட கலெக்டர் கே.எம்.சரயு உள்பட பலர் உள்ளனர்.

# திருச்செந்தூர் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதல் : கடல் உள்வாங்கியதால் பரபரப்பு!

திருச்செந்தூர், ஆக.19–

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நேற்று கூட்டம் அலைமோதியது. மேலும் சுமார் 50 அடி தூரம் கடல் உள்வாங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.



தமிழ்க்கடவுள் முருகனின் அறுபடைவீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் எப்போதும் திருவிழாக் காலங்களிலும், விடுமுறை நாட்களிலும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபடும் தலமாக உள்ளது.

மேலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் கூட்டம் மேலும் அலைமோதியது.

பக்தர்கள் அதிகாலை முதலே கடலிலும், நாழிக்கிணற்றிலும் நீண்ட வரிசையில் நின்று புனித நீராடினர். அதன்பிறகு இலவச பொது தரிசனம், ரூ.100 சிறப்பு கட்டண தரிசனம் மற்றும் மூத்த குடிமக்கள் வழி என அனைத்திலும் நீண்ட வரிசையில் காத்திருந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

இதனால் கோயில் வளாகமே பக்தர்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

திருச்செந்தூர் கோயில் பகுதி கடலானது அமாவாசை, பவுர்ணமி நாட்கள் மற்றும் அதற்கு முந்தைய அல்லது பிந்தைய நாட்களில் உள்வாங்குவதும், வெளியேறுவதும் வாடிக்கையாகி விட்டது. இந்நிலையில் இன்று பவுர்ணமி என்பதால் கடல் மட்டத்தில் மாற்றம் ஏற்பட்டதால் திருச்செந்தூர் கோயில் பகுதியில் அய்யா வைகுண்டர் அவதாரபதி அருகே சுமார் 50 அடி தூரம் கடல் உள்வாங்கியது.

இதனால் பாசிப் படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

இருந்தபோதிலும் பக்தர்கள் அச்சமின்றி வழக்கம்போல் புனித நீராடினர். அப்போது பாறைகள் மேல் நின்று சிலர் செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

கோயில் புறக்காவல் நிலைய போலீசார் பக்தர்களை பாதுகாப்பாக நீராடுமாறு ஒலிப்பெருக்கி மூலம் எச்சரித்தனர்.

OWNER AND PUBLISHER F.USMAN FAHEED. PUBLISHED AT NO. 33/1. WALLAJAH ROAD. CHEPAUK. CHENNAI-5. PRINTER. F.USMAN FAHEED. PRINTED AT MOUNT PRINTERS OLD NO.12. NEW NO.8. POONNAPPA LANE. TRIPLICANE. CHENNAI-600 005. EDITOR: Dr.USMAN FAYAZ